விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 04 வியாழக்கிழமை (17.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 88



ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


## —சமாதான முயற்சிகள் தொடர்பில்—

# தேசியத் தலைவர் அக்கறையுடன் செயற்பட

# அரசு முட்டுக்கட்டையை ஏற்படுத்துகின்றது

## சு.ப. தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்று ஜேர்மனுக்குப் பயணம்

(பேர்லின்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தில் சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கூமிலிருந்து நேற்று காலை 9.05 மணிக்கு ஜேர்மனியின் தலைநகர் பேர்லினுக்கு சென்றனர்.

இக்குழுவினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மன் கிளைச் செயற்பாட்டாளர்கள், துணையமைப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் பேர்லின் வாழ் தமிழ் மக்கள் ஆகியோர் வரவேற்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய எம்.பிக்களிடம் தங்கன் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)



சமாதான முயற்சிகளில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மிகுந்த அக்கறையுடன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். ஆனால், இலங்கை அரசு சமாதான முயற்சிகளில் பலத்த முட்டுக் கட்டைகளை ஏற்படுத்தி வருகின்றது என தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் குற்றம்சாட்டியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளும் அரசும் தனித்தனியே இடம்பெறக் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் அந்த பொதுக்கட்டமைப்பை ஐ.தே.க. எதிர்க்கும் என அவர் தெரிவித்தார்.

அவ்வாறு நாங்கள் எதிர்க்காமல் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டுமானால் முஸ்லிம் பிரதிநிதிகளும் உள்ளடக்கப் படவேண்டும் என கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது ரணில் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கல் தொடர்பாக நாம் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் விரிவான பேச்சுக்களை நடாத்தியுள்ளோம்.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் குறிப்பிட்ட சில விடயங்களில் மாத்திரமே இணக்கம் ஏற்படவேண்டியிருக்கின்றது. இந்த இணக்கப்பாடுகளில் தீர்வுகள் விரைவாகத் தீர்க்கப்படவேண்டும்.

அதனை இருதரப்பினரும் இழுத்தடிப்புச் செய்வது நல்லதல்ல. தங்களின் சுய நலன்களை வெளிக்காட்டுவதற்காகவே அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை உருவாக்காமல் காலத்தை வீணடிப்பது வருவதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி

### மட்டக்களப்பில்...

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மருதமுனை பகுதியில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று மாலை இடம்பெற்ற இச் சூட்டுச் சம்பவத்தில் ஜெயநாதன் (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.


மேலும் மற்றொரு நபர் காயமடைந்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில்...

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணையில் நேற்று இரவு 9.30 மணியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வாகரை மான்கேணியைச் சேர்ந்த தம்பிராஜா ஜெகன் (வயது 21) என்ற இளைஞன் கொல்லப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய் நேற்று புலிகளிடம் சரண்



(யாழ்ப்பாணம்)

உயர் அதிகாரிகளின் கடுமையான தண்டனைகளை தாங்கமுடியாத இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரிடம் சரணடைந்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள மந்தவலநெடுங்கமுவ என்ற பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட கே.எம். கிருஷாந்த ரணில் சாந்தகலும் (வயது 23) என்ற மேற்படி சிப்பாயே நேற்று சரணடைந்தவராவார்.

சாவகச்சேரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள ஹெமுனு வோச் என்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் குழுக்களை வெளியேற்றக்கோரி வெலிக்கந்தையில் நேற்று வீதிமறியல்

தமது பிரதேசத்தில் முகாமிட்டுள்ள ஆயுதக் குழுக்களை வெளியேற்றக்கோரி பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பிரதேச மக்கள் நேற்று வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள செவனப்பிட்டிய சந்தியில் இவ் வீதிமறியல் போராட்டம் நடைபெற்றதால் நேற்று பிற்பகல் வரை அவ் வீதி வழியான அனைத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சியுடன் இணைந்து அரசாங்கம் கூத்தடிக்கிறது என்கிறார் சோமவன்ஸ

(கொழும்பு)

ஆட்சிப் பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வருவதற்கு அரைவாசி வாக்குக்களை பெற்றுக்கொடுத்தது ஜே.வி.பி. என அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதனை சுதந்திரக் கட்சி மறந்துள்ளமையால் நாட்டின் நிர்வாகம் சீரழிந்துள்ளது. இவ்வாறான உதவியினைச் செய்த எம்மை ஜனாதிபதியும் அரசாங்கமும் மறந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானம் குறித்து பிரிட்டன் அரசு அக்கறை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் உள்ள வானூர்திகள் குறித்து பிரிட்டன் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளதாக வெளிநாட்டமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் ராஜாங்க செயலாளர் ஜக் ஸ்ரோவை சந்தித்தபோது இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக வெளிநாட்டமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி அனர்த்த நிவாரண உதவி குறித்த நன்றியறிதலை வழங்க பிரித்தானியா (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

யாழ் கொழும்பு



தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

*Your friend in the skies...* E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,

வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நான்காம் ஈழப்போரை ஆரம்பித்து வைக்க அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்து வருகிறது

## இனவாதிகளின் நகர்வின் அடிப்படையில் அரசியல் நோக்கர்கள் கருத்து





(யாழ்ப்பாணம்)

***நான்காம் ஈழப்போரை ஆரம்பிக்கும் முஸ்தீப்புகள் வலுப் பெறுகின்றன. தற்போதைய விதி முறைகளோடு போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணியபடி ஒரு பொதுக் கட்டமைப்பினூடாக நியாயமான முறையில் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு பிரதேசங்கள் பாகுபாடின்றி புனரமைக்கப் பட்டால் புலிகள் தமது பன்முக கட்டமைப்பின் ஆளுமையூடாக அரசியல் இராஜதந்திர ரீதியில் தம்மை மேலும் வலுப்படுத்திக் கொள்வார்கள் என்பது யதார்த்தம். இவ்வாறு அரசியல் நோக்கர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.***

பெரும்பான்மையினருக்கும் கட்டம் கட்டமாக பொருளாதார ஆக்கிரமிப்பை இலங்கையில் நிறைவேற்றி வரும் பிராந்திய மேலாண்மை வாதிகளிற்கும் அவர்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதார நலன்களிற்கும் போர்ச்சூழல் என்பது ஒத்து வராததொன்று.

அதனால் யுத்த நிறுத்தம் என பது அவர்களின் நலன்களிற்கு மிகவும வேண்டியதொன்று. ஆனால் தற்போது அமுலில் உள்ள யுத்த நிறுத்த உடன் படிக்கையில் புலிகளிற்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸது தொடர பேரினவாதிகள் தயாரில்லை! இந் நிலையயல் இருபது வருட கொடிய யுத்தத்தினாலும் அண்மையில் சுனாமி பேரலையினாலும் பாதிக்கப்பட்டு அல்லல்படும் லட்சக் கணக்கான மக்களிற்கு நிவாரணம் வழங்கி புனர்வாழ்வு அளிப்பதிலோ அல்லது இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை பேச்சுவார்த்தைகளின் மூலம் காணுவதிலோ இனவாதிகளும் மேலாண்மை வாதிகளும் உண் மையில் எள்ளளவு அக்கறை கூட இல்லை!

போரை ஆரம்பித்து புலிகளை இராணுவரீதியில் பலவீனபடுத்திய பின்னர் சுனாமியால் தமிழர் தாயக பிரதேசங்களில் அல்லலுறும் மகளின் அவல நிலையை நெருக்கடியாகப் பயன்படுத்தி தமக்கு சாதகமான ஒரு புதிய யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு புலிகளை அடிபணிய வைக்கலாம் என சிலர் மனப்பால் கூடிக்கிறார்கள்.

தற்போது ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள புலிகளின் அரசியல் விவகார குழுவின் இனவாத அரசின் உண்மை முகத்தை வெளிக் கொண்டுவரும் வெற்றிகளை மட்டுப்படுத்தும் முகமாகவும் அரசினால் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கும் நான்காம் ஈழப் போரை நியாயப்படுத்தும் முயற்சியில் வெளிவிவகார அமச்சர் கதிர்காமர் ஐக்கிய இராச்சியம் சென்றுள்ளார்.

இதற்கான நகர்வுகள் மிகவும் திட்டமிட்ட ரீதியில் பல வாரங்களாக முன்னெடுக்கப்படுகிறது. கருணாவை சாட்டாக வைத்து புலிகளை சீண்டி யுத்தத்தை திணிக்க முயன்றவர்கள் பாரிய ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அண்மை காலங்களில் வேணடும் என்றே திட்டமிட்டு ஊதிப் பெருபக்கப்பட்ட புலிகளின் விமானப் படை விவகாரம் நான்காம் ஈழப் போரை ஆரம்பிக்க அரசினால் பயனபடுத்தப்படுவதற்கான பிரசார நகர்வுகள் வலுப் பெறுகின்றன.

அதாவது போர் ஆரம்பித்தால் புலிகள முதலில் தமது யுத்த நிறுத்தவிதி முறைகளை மீறி சமாதான காலத்தில் புதிதாக உருவாகியதாக பிரசாரிக்கப் படும், விமானப்படை மூலம் தாக்குவார்கள என்றும் இதனால் இலங்கையின் இறைமை பாரிய அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது என்ற தொனியிலான அபயக்குரல் பிரசாரங்கள் அமைக்கின்றன.

இவ்வாறு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு இறைமையுள்ள நாடு தற்பாது காப்பிற்காக அந்த அச்சுறுத்தலை நிர் மூலமாக்கும் முயற்சியாக குறித்த காலவரையறையில் போர் ஆரம்பிக்கபடலாம் என்ற அடிப்படையில முதல் தாக்கும் உரிமை அரசாங்கத்திற்கு உள்ளதாக நியாயப்படுத்தும் பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.

அரசின் மீது சில நிபந்தனைகளை விதித்து புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகவும் நேர்வே அனுசரணையாளர் நிலையில் இருந்து விலகவும் காலக்கெடு விதித்துள்ளனர் என வதந்தி ஒன்று திட்டமிட்ட முறையில் தற்பொழுது கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்த நகர்வுகளை எதிர் கொள்ளுவதிலும் முறியடிப் பதிலும் தமிழ் தேசிய தலைமை உறுதியாக இருக்கிறது என்பதை ஆப்பிழுத்த குரங்காக இனவாதிகள் அவதியுறும் பொழுது உணர்வார்கள என்பதில் ஐயம் இல்லை என்றும் அரசியல் நோக்கர்களால் மேலும் சுட்டிக்காட்டப் படுகிறது. (ப)

## இராசி பலன்

17.03.2005

பங்குனி 4, வியாழக்கிழமை

சப்தமி பிற்பகல் 02.37 மணிவரை

ரோகிணி காலை 7.26 மணிவரை

இராகுகாலம் 1.49 - 3.19 மணிவரை

சுபநேரம் 7.49 - 9.19 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிக செலவு, போசன சுகக் குறைவு, மனோ சங்கடம், காரிய தாமதம். |
| இடபம் | குடும்ப சுகம், போசன நன்மை, வெகுமானம், காரிய சிந்தை. |
| மிதுனம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், தனவிரயம். |
| கடகம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | பிரபுத்தனம், தேகநலன், நல்ல முயற்சி, தெய்வ சிந்தை. |
| கன்னி | தேசாந்திர வாசம், புத்திரரால் கவலை, தந்தை வழி உறவு, புதிய முயற்சி. |
| துலாம் | சரீர பீடை, காரிய இடையூறு, பொருள் விரயம், வீண் பகை. |
| விருச்சிகம் | மனோ சௌக்கியம், சயன சுகம், களஸ்திர நன்மை, போசன நன்மை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், செல்வாக்கு, விருந்துபசாரம், தேகநலன். |
| மகரம் | அஜீரண ரோகம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, தொழில் சிந்தை. |
| கும்பம் | தனவிரயம், வேலைச் சுமை, காரிய தாமதம், தன்னம்பிக்கைக் குறைவு. |
| மீனம் | நற்கீர்த்தி, தொழில் விருத்தி, பிரயாண நன்மை, மனோ தைரியம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

# சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 425 மில்லியன் ரூபாவை கனடா ஒதுக்கியுள்ளது

## கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் பருத்தித் துறையில் தெரிவிப்பு

(கொழும்பு)


சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதறகாக கனடா அரசாங்கம் 425 மில்லயன் ரூபாவை ஒதுக்கீடு செயதுள்ளது. அந் நிதி இன்னமும் வழங்கப்படவில்லை. அந் நிதி பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும விதத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், உலக உணவு நிறுவனம் ஆகியவற்றின் மூலமாக வழங்கப் படும் என்று நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்கு விஜயம் செய்த கனடாவின் முன்னாள அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி மீனா மரயா கூறினார்.

சுனாமி பேரலை அனர்த்த இழப்புப் பாதிப்புகளை பார்வையிடவும வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டும் கனடாவிலிருந்து திருமதி மீனா மரியா தலைமையில் நான்கு பாரளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு செனட் சபை உறுபபினரும், சில தமிழ் வர்த்தகர்களும் தமிழ் ஊடகவியலாளர்களும் கனடாவுக்கான இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்த சில்வா ஆகியோர் உட்பட சுமார 25 பேர் கொண்ட குழுவினர் நேற்று முற்பகல் கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலியை வந்தடைந்தனர்.

அங்கிருந்து நேரடியாக வடமராட்சி கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மணறகாடு கிராமத்துகுச் சென்று அங்கு சுனாமி பேரலை அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதங்களைப பார்வையிட்டதுடன் ஏற்பட்ட இழப்புகள் தொடர்ந்து மேற்கொளளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள் தொடர்பாக அக்கிராம மக்களுடன் கலந்துரையாடினர்.

தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை வந்தடைந்த இக்குழுவினர் பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள சுனாமி அனர்த்த நிவாரண செயலணி அலுவலகத்தில் அதன பொறுப்பாளரையும் வடமராட்சி வடக்கு கடறதொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகளையும் சந்தித்து சுனாமி அனர்த்த இழப்புகள், நிவாரண நடவடிக்கைகள் புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக இரண்டு மணி நேரமாகச சந்தித்துக கலந்துரையாடினார்கள்.

பேரலை அனர்த்த நிவாரண நடவடிக் கைகள், குடியேற்றம், மீள தொழில்களை ஆரம்பித்தல் ஆகியவற்றுக்கும் எதிர்நோககப் படும் பிரச்சினைகள், தேவைகள், இடையூறுகள், கஷ்டங்கள் தொடர்பாக செயலணிக் குழுப் பொறுபபாளர் எஸ். பாலையா, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதி எஸ்.குடடித் தம்பி, கடற்றொழிலாளர் சங்க சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமாரன் ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர்.



இக்கலந்துரையாடலின்போது கனேடியத தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய திருமதி மீனா மரியா மேலும் கூறியதாவது,

இலங்கையில் பேரலை அனர்த்தத்தால பாதிக்கப்பட் டோருக்கு கனடா வர்த்தக சமூகம் உதவிகளைப் புரிய முன் வந்துள்ளது. அனர்த்த உதவிகளுக்கென கனடா அரசாங்கம் 425 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. கனடா அரசின் இந் நிதி இன்னமும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இந்நிதி உலக உணவு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பனவற்றினூடாக வழங்கப்படும்.

இங்கு நேரில் கண்ட கேட்ட விபரங்களை கனடா அரசுக்கு எடுத்துச் சொல்லி இயன்ற உதவிகளை வழங்க தயாராக உள்ளோம் என்றார். அக்குழுவில் வந்த வர்த்தகர்கள் பேரலை நிவாரண நடவடிக்கைகளுக்கு தம்மாலான உதவிகளைப் புரிவதாக உறுதி அளித்தனர். (ப)

**பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக் கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை**

**உறுப்புரை 11.(2)**

**ஈ) கர்ப்ப காலத்தில் பெண்களுக்குத் தீங்குபயப்பதாக நிறுவப்பட்ட வேலை வகைகளில், அவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை வழங்குதல்.**


# வடக்கின் பெரும்போர் - 2005

## இன்று ஆரம்பமாகிறது

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே வருடாந்தம் நடைபெறும் வடக்கின் பெரும்போர் எனப் பெயர் பெற்ற மாபெரும் கிரிக்கெற் போட்டி இம்முறையும் நடைபெறுகிறது.

இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி, இரு பாடசாலைகளுக்கு மிடையே நடைபெறும் 99ஆவது போட்டியாகும். அத்துடன் இது 101 ஆவது வருடமாக இம்முறை நடைபெறுகிறது.

## யாழ்.மத்திய கல்லூரி



இடமிருந்து வலமாக:-

(இருப்பவர்கள்) ஈ.எவ்.ஆர்.ஜெயக்குமார் (அணிப்பொறுப்பாளர்) எஸ்.சுரேஷ்மோகன் (பயிற்றுவிப்பாளர்), கே.றொகான் (அணித்தலைவர்), கே.இராஜதுரை (கல்லூரி அதிபர்), கே.கலிஸ்ரன் (அணி உபதலைவர்) வி.எஸ்.மகேந்திரன் (அணிக்காப்பாளர்).

(நிற்பவர்கள்) முதல்வரிசை:- என்.மதிப்பிரியன், எம்.மயுரன், ஆர்.வினோத்குமார், எம்.யசோதரன், எவ்.எக்ஸ்.மயுரன், எஸ்.சத்தியன், ஜே.வியாசன், ஜே.ஆர்.ஏ.பிரசாத்.

நிற்பவர்கள்:- இரண்டாம் வரிசை:-

டி.சுதர்சன், கே.ஷெல்ரன், ஜி.மகீபன், பி.தயான், என்.நவநீத், ஜே.ஏ.மயுரன்.

**க.றொகான்:-** அணித்தலைவர், வலதுகை மத்திய தரவரிசை துடுப்பாட்ட வீரர், வலது கை மித வேகப்பந்து வீச்சாளர்.

**க.கலிஸ்ரன்:-** அணியின் உபதலைவர், வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர், இடது கை மத்திய தரவரிசைத் துடுப்பாட்ட வீரர் சிறந்த களத்தடுப்பாளர்.

**ம.யசோதரன்:-** இடதுகை வேகப்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர், எல்லைக்கோட்டு களத்தடுப்பாளர்.

**பி.சே.மயுரன்:-** இடதுகை மத்திய வேகப்பந்து வீச்சாளர்.

**செ.சத்தியன்:-** வலதுகை வேகப்பந்து வீச்சாளர், மத்திய தரவரிசை துடுப்பாட்ட வீரர், களத்தடுப்பாளர்.

**ஜோ.இ.ஏ.பிரசாத்:-** புதுமுகம், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், இறுதிநிலை துடுப்பாட்ட வீரர், அதிக நேரம் களத்தில் நின்று விளையாடக்கூடியவர். சிறந்த களத்தடுப்பாளர் மொத்தத்தில் சகலதுறை ஆட்டக்காரர்.

**கு.மகீபன்:-** புதுமுகம், மத்திய தரவரிசை வலதுகை துடுப்பாட்ட வீரர், மித வேகப் பந்துவீச்சாளர், சிலிப் திசை களத்தடுப்பாளர்.

**ஜெ.வியாசன்:-** புதுமுகம், வலதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர், மத்தியதர வரிசை துடுப்பாட்ட வீரர், களத்தடுப்பாளர்.

**ந.மதிப்பிரியன்:-** புதுமுகம், இடதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர். களத்தடுப்பாளர்.

**டொ.சுதர்சன்:-** புதுமுகம், இடதுகை ஆரம்பத் துடுப்பாட்டவீரர், இடதுகை சுழற் பந்து வீச்சாளர், உதவி விக்கெற் காப்பாளர்.

**ந.நவநீத்:-** புதுமுகம் இடதுகை ஆரம் பத் துடுப்பாட்ட வீரர், இடதுகை மிதவேகப் பந்து வீச்சாளர். எல்லைக்கோட்டு களத்தடுப்பாளர்.

**கு.ஷெல்ரன்:-** புதுமுகம், அணியின் விக்கெற்காப்பாளர், வலதுகை மத்தியதர வரிசை துடுப்பாட்டவீரர்.

**பா.டயான்:-** புதுமுகம் வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர், வலதுகை மத்திய தரவரிசை துடுப்பாட்டவீரர்.


**ம.மயுரன்:-** புதுமுகம் அணியின் இளைய வீரர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர்.

**ஜெ.அ.மயுரன்:-** புதுமுகம், சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மிதவேகபந்து வீச்சாளர், களத்தடுப்பாளர்.

**ஜெ.டிலான்:-** புதுமுகம், வலதுகை மத்தியதர வரிசை துடுபபாட்ட வீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர். வெளிநிலைக் களத்தடுப்பாளர்.

**இ.வினோத்குமார்:-** புதுமுகம், வலதுகை துடுப்பாட்டவீரர், வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர்.

## சென் ஜோன்ஸ் கல்லூரி



இடமிருந்து வலமாக:-

(இருப்பவர்கள்) வி.எஸ்.பி.துஷிதரன் (அணிக்காப்பாளர்), என்.நவகீதன், ரி.மதன்ராஜ் (அணித்தலைவர்) எஸ்.தனபாலன் (கல்லூரி அதிபர்), ஏ.அன்புஜன் (அணி உபதலைவர்), கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுவிப்பாளர்),

(நிற்பவர்கள்) முதல் வரிசை:- வி.இராகுலன், ஏ.அக்ஷயன், பி.கஜரூபன், ஜீ.சஞ்ஜீவன், ஏ.மயுரதன், ரி.நிரூபன், ரி.கிருஷாந்த்.

இரண்டாம் வரிசை:- கே.வெங்சகார், ஏ.கிரிஷான், என். நேசவர்மன், என்.டினேஷ், பி.சஜிந்தன்.

**தெ.மதன்ராஜ்:-** அணித்தலைவர், வலதுகை துடுப்பாட்ட வீரர், இடதுகை மித வேகப்பந்து வீச்சாளர், கடந்த வருடம் நூறாவது போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டவர்.

**ஆ.அன்புஜன்:-** வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர் அணியின் உபதலைவர் சிறந்த களத்தடுப்பாளர்.

**ந.நவகீதன்:-** இடதுகை துடுப்பாட்டவீரர். இடதுகை பந்துவீச்சாளர், கடைநிலை துடுப்பாட்டவீரர், களத்தடுப்பாளா மொத்தத்தில் சகலதுறை ஆட்டக்காரர்.

**ப.சஜிந்தன்:-** வலதுகை துடுப்பாட்டவீரர், விக்கெற் காப்பாளர்.

**தி.நிருபன்:-** வலதுகை துடுப்பாட்டவீரர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.

**அ.மயுரதன்:-** வலதுகை கடைநிலை துடுப்பாட்டவீரர். வலதுகை சுழற்பந்து வீச்சாளர்,

**ப.கஜரூபன்:-** இடதுகை கடைநிலை துடுப்பாடடவீரர். வலதுகை சுழற்பந்து வீச்சாளர்.

**ப.நேசவர்மன்:-** புதுமுக வலதுகை ஆரம்பத் துடுப்பாட்டவீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், சிலிப்திசை களத்தடுப்பாளர்.

**வா.இராகுலன்:-** புதுமுக இடதுகை துடுப்பாட்டவீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர்.

**அ.அக்ஷயன்:-** புதுமுக வலதுகை கடைநிலை துடுப்பாட்டவீரர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.

**க.வெங்சகார்:-** புதுமுக இடதுகை கடைநிலைத் துடுப்பாட்டவீரர், வலதுகை சுழற்பந்து வீச்சாளர், அணியின் இளைய வீரர், சிறந்த களத்தடுப்பாளர்.

**அ.கிரிஷான்:-** வலதுகை கடைநிலை துடுபபாட்டவீரர், வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர்.

**த.கிருஷாந்த்:-** வலதுகை ஆரம்பத்துடுப்பாட்டவீரர், வலதுகை மத்திய வேகப்பந்து வீச்சாளர் களத்தடுப்பாளர்.

**ஞா.சஞ்ஜீவன்:-** புதுமுகம் வலதுகை வேகப்பந்து வீச்சாளர், இறுதிநிலை துடுப்பாட்டவீரர்.

**நா.டினேஷ்:-** புதுமுகம் வலதுகை ஆரம்பத்துடுப்பாட்டவீரர், விக்கெற் காப்பாளர்.

## நடுவர் ஸ்ரீவ் பக்னரின் நூறாவது டெஸ்ட் போட்டி



நேற்று கொல்கத்தா ஈடன்காடன் மைதானத்தில் ஆரம்பமாகிய இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட்போட்டி தனது கிரிக்கெற் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு போட்டியாகும் என பிரபல கிரிக்கெற் நடுவர் ஸ்ரீவ் பக்னர் தெரிவித்திருக்கிறார். ஏனெனில் அவர் நடுவராகக் கடமையாற்றும் நூறாவது போட்டி இதுவாகும்.

2007ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டியிலும் தாம் நடுவராகப் பணிபுரியவேண்டும் என்பதே அவரது விருப்பமெனப் பக்னர் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளைச்சேர்ந்த ஸ்ரீவ்பக்னர் தாம் நடுவராகப் பணிபுரிய ஆரம்பித்த மண்ணிலேயே ஓய்வுபெற விரும்புவதாகவும் மேலும் தெரிவித்தார். (ற-7)

## சுனாமி நிவாரண நிதிப்போட்டி பாகிஸ்தான் அணிக்கு வெற்றி


இநதிய பாகிஸ்தான் அணிகளின் மூத்த வீரர்கள் பங்குபற்றிய கண்காட்சிப் போட்டியொன்று நேற்று முன்தினம் பீகார் மாநிலத்தின் தலைநகர் பட்னாவில் நடைபெற்றது. இப் போட்டியில் பாகிஸ்தான் அணி 63 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சுனாமி நிவாரண நிதிக்காக நடத்தப்பட்ட இப்போட்டியில் இந்திய முன்னாள் தலைவர் கபில்தேவ் தலைமையில் இந்திய அணியும் பாகிஸ்தானின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அப்துல் காதர் தலைமையில் பாகிஸ்தான் அணியும் மோதின.

30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 4 விக்கெற்றுக்களை இழந்து 229 ஓட்டங்களை எடுத்தது. ஹுமாயுன் பர்கத் 79 ஓட்டங்களை எடுத்தார். இதில் 9 பவுண்டரிகளும் 2 சிக்ஸர்களும் அடங்கும். இஜாஸ் 37 ஓட்டங்களை எடுத்தார். அஜய் ஜடேயா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தனது 30 ஓவர்களில் 9விக்கெற்றுக்களை இழநது 166 ஓட்டங்களை மாத்திரமே எடுத்ததால் தோல்வி அடைந்தது.

பிரவீன் ஆம்ரே அதிகபட்சமாக 39ஓட்டங்களை எடுத்தார். வெங்சர்க்கார் 13ஓட்டங்கள் பந்துவீச்சில் அதுர் ரஹ்மான்,



சொகைப் முகமது ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களை வீழ்த்தினர். இப் போட்டி மூலம் திரட்டப்பட்ட 11 இலட்சம் ரூபா நிதி இந்தியப் பிரதமரின் சுனாமி நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# மனுமகனின் திருப்பாடுகளை மனந்திருந்தி நினைவு கூருவோம்



மனிதன் பாவநிலையிலே பற்றுக்கொண்டு பற்றவேண்டியவரைப் பற்றாமல் பாதம் போன போக்கினில போய்த் தொலைந்துவிடாமல் பார் போற்ற வாழ்ந்து பரமனைத் துதிக்க வேண்டும். அவரில் சிறக்கவேண்டும் என்பதை நினைவுகூரும் விதமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது தவக்காலம்.

ஒருத்தல், ஒருசந்தி, நோன்பு ஆகியன ஒரு காலத்தில் கிறிஸ்தவ வாழ்வின் அடையாளங்களாக இருந்தன. ஆனால் தற்போதுள்ள சூழலில் இவையனைத்தும் பழைய காரியங்கள் என எளிதாக நிராகரிக்கப்பட்டுவிடுமோ என்ற ஐயமே நம்மவர் பலரிடம் காணப்படுகின்றது.

சில காரியங்கள், கருத்தியல்கள் நிறம் மாறா நிரந்தரத்தன்மை கொண்டவை. அவற்றின் அர்த்தங்கள் ஒருபோதும் மாறுவதில்லை. நோன்பும் தவக்கால நிகழ்வுகளும அவ்வாறே.

நோன்பு என்பது நிதானித்து தன்னையே திரும்பிப்பார்த்தல, உள்ளுள் பயணப்படல், உடைந்தவற்றை செப்பனிடல், காயங்களை ஆற்றுதல், இதற்கு உணவுக்கட்டுப்பாடும் அதோடு கூடிய இறைதியான சிந்தனைக் குவிப்பும் அதிக பயன் தருவன.

(சங்கீதம்:50:3)

"என் குற்றங்களை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது" (சங்கீதம்:50:10)

தூயதோர் உள்ளத்தை, இறைவா நீ என்னகத்தே உருவாக்கும்; உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.

உலகில் அதிகம் சாப்பிட்டு இறந்தவர்கள் உண்டே தவிர குறைத்துச் சாப்பிட்டு மரணித்தவர்கள் அதிகமில்லை. மலையில் வாழ்ந்த சித்தர்கள் சமையல் செய்தா சாப்பிட்டார்களா? காய், கனி, கிழங்கு, கநதமுலங்களோடு சரி, இந்துக்கள வாரத்தில் ஒருநாள் விரதம் இருககிறார்களா. உணவு செரிமானத்தை ஒழுங்குபடுத்துவதே விரதத்தின் நோக்கம். இது இறைவன் பெயரால் வழங்கப்படும் தேக ஆரோக்கியம்.

மகாகவி பாரதியார் சொல்வது போல் நிறையச் சாப்பிடக்கூடாது என்பதும் தவறு, நிறையச் சாப்பிட வேண்டும் என்பதும் தவறு. அவையறிந்து சாப்பிட வேண்டும்.

எமது மீட்பர் இயேசு கிறிஸ்து இவ்வாறு தெரிவிக்கின்றார்,

"நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்கவேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டும் என்பதற்காகவே முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில எண்ணெய் தேய்த்து முகத்தைக் கழுவுங்கள். அப்போது நீங்கள் இருபது மனிதருக்குத் தெரியாது. மறைவாக இருக்கின்ற உங்கள் தந்தைக்கு மட்டுமே தெரியும்.

(மத்தேயு:6:17-18)

### தெய்வத்தை அணுகும்முறை

உலகத்திலே மனிதன் அதிகமாக நேசிக்கக்கூடியது; அமைதியும் நிம்மதியுமே. பணம் வரலாம போகலாம், வீடு வாங்கலாம் விற்கலாம், நலம் வாங்கலாம் சொத்தைப் பெருக்கலாம். எல்லாம் இருந்தும்கூட நிம்மதி இல்லை என்றால் அவன் வாழ்ந்து என்ன பயன்.

"சேர்க்கின்ற சொத்து நிம்மதிக் காகவே
கட்டுகின்ற மனைவி நிம்மதிக காகவே
தேடுகின்ற வீடும் நிலமும் நிம்மதிக்காகவே
எப்போது அவன் நிம்மதியை நாடுகின்றானோ
அப்போது அவனுக்கு அவஸ்தை வந்து சேருகிறது"

ஆரம்பத்தில் மனிதன் விரும்பியோ, விரும்பாமலோ பல சிக்கல்களைத் தானே உண்டாக்கிக்கொள்கின்றான். தானே கிணறு வெட்டுகிறான். அதில் தானே விழுகின்றான். தானே தொழில் தொடங்குகிறான். தவியாய்த் தவிக்கிறான். இப்படி எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் மனித வாழ்க்கை துன்பகரமாகவே காட்சியளிக்கிறது.

ஆகவேதான் மனிதன் ஏதாவது ஒரு புகலிடத்தை நாடுகிறான். தனக்கு அடைக்கலம் கொடுக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடுகிறான்.

**திருச்சபையின் காலங்களில் அருள் ஊற்றானது பெருக்கெடுத்தோடும் காலம் தவக்காலம்!**

மனிதர்களே அவதூறு பேசுகிறார்கள். கேலி செய்கிறார்கள். ஆகவே அவன் தெய்வத்தை சரணடைகிறான். தெய்வம் நிம்மதியைத் தருகிறது. தெய்வத்தை அணுகுவதில் திறமையுள்ளவர்கள் தங்கள் காரியங்களை கண்முன்னாலே சாதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு ஏழை உழைப்பாளி கோவில் வாசலில் படுத்துக்கொள்வானாம். காலையில் கண்விழிக்கும்போது இறை சந்நிதானத்தில்தான் கண்விழிப்பானாம் (தெய்வத்திடம்). இறைவனிடம் வேண்டிக்கொண்டுதான் தொழிலுக்குப் புறப்படுவானாம். எப்படியும் அன்றையதினம் பத்து ரூபாய் சம்பாதித்துவிடுவானாம்.

என்றைக்கு அவன் ஞாபகமறதியாக இறைபிரசன்னத்தைப் பார்ததுக் கண்விழிக்காமல் தெருவைப் பார்த்து விழிக்கிறானோ அன்று அவன் வாழ்க்கையில் பெரும் சிரமம் ஏற்படுமாம். இதை எப்படிச் சொல்கிறார்கள் என்றால், இன்றைக்கு இவனுக்கு இலாபமில்லாத நாள் என்று தெரிந்து இறைவனே அவனை வேறு பக்கமாய் விழிக்கவைக்கிறார் என்கிறார்கள் ஞானத்தை அடைந்தவர்கள்.

"நன்றி கெட்டவன் மனிதன் நன்றியுள்ளது மனிதம்"

நாம் பல்வேறு இடங்களில் வசிப்பவர்களாய் இருந்தாலும் பல பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருநதாலும் நாம் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள் என்ற உணர்வு ஒனறுசேர்க்கின்றது. இறைத்தந்தையின் பிள்ளைகளாகிய நாம் சகோதர சகோதரிகளாக இருக்கின்றோம்.

நமக்குள்ளே நாம் பகிர்ந்து வாழுமபோது அனைவருக்கும் தேவையான உணவு கிடைக்கின்றது. குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன. இறைவன் போற்றப்படுகின்றார். இறையாட்சி மலர்கின்றது.

ஆகவே நாம் அனைவரும் இறைத்தந்தையின் பிள்ளைகளாக வாழ இத்தவக்காலத்தில் சிறப்பாக முயற்சி எடுப்போம். தவக்கால சிந்தனையோடு இறை ஆசிவேண்டிப் பிரார்த்திப்போம்.

**நோயல்**

## விநியோகம்

இருபாலை கிழக்கு விக்னேஸ்வரா சனசமூகநிலையத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும வறிய குடும்பங்களுக்கு கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவா நிலையத்தினர் குடிநீர் விநியோகித்து வருகின்றனர்.

(ப-74)

## பயிற்சிச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தீவகக் கல்விவலயமும் இணைந்து புதிதாக ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான முன்சேவைப் பயிற்சிச் செயலமர்வு ஒன்றினை நடத்தவுள்ளது.

இச்செயலமர்வு பயிற்சி எதிர்வரும் 18,19,20ஆம் திகதிகளில் காலை 8.00 தொடக்கம் மாலை 5.00 மணிவரை வேலணையிலுள்ள சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுப் பயிற்சியில் பங்குபற்றுவோருக்கு விசேட பேருந்து சேவையும், மதிய உணவும் வழங்கப்படும். (ப-9)

## செம்மண் அகழ்வு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ரயில்பாதைகளில் உள்ள செம்மண்ணை சட்டவிரோதமான முறையில் சிலர் அபகரித்து வருகின்றனர்.

கட்டடங்கள் கட்டுமானப் பணிகளிற்காகச் சட்டவிரோதமான முறையில் மணல்மண்களும் நாளாந்தம் எடுத்துச்செல்லப்படுகின்றது.

(ப-51)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோர் போராட்டங்களில் ஈடுபட முஸ்தீபு

### பாராளுமன்ற உறுப்பினர் விஜித அபேரட்ண தகவல்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வீதியில் இறங்கிப் போராடம் நடாத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித அபேரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் கடற்கரையில் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் கட்டடங்களை அமைக்கும் திட்டத்தை விலக்கிக்கொள்ளவேண்டும்.

அரசாங்கம் மக்களைப் பாதிக்காத கரையோரப் பாதுகாப்புத் திட்டங்களை அமுல்செய்வதற்கு முன்வரவேண்டும். தெளிவான காரணங்கள எதுவும் இல்லாமல் அரசாங்கம் ஜனாதிபதி முறைமை ஒழிப்பிற்கான அபிப்பிராய வாக்கெடுப்புக்குத் தயாராகிவருகிறது.

அபிப்பிராய வாக்கெடுப்பினை நடாத்த முடிந்தால் நூறுகோடி ரூபாவை செலவிட நேரிடும். இந்த நூறு கோடியையும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பது சிறந்தது.

இன்றைய சூழ்நிலையில் அபிப்பிராய வாக்கெடுப்பு அவசியமற்றது.

ஜே.வி.பி. அரசாங்கத்துள் இருந்துகொண்டு பாரிய சவாலை எதிர்நோக்குகின்றது.

இது நாட்டிற்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தயுள்ளது எனவும அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## அனர்த்த நிவாரணப்பணிகளில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஆராய்வது அவசியம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கபபட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என நாட்டுப் பற்றுடைய தேசிய அமைப்பின் இணைத் தலைவர் அல்லேகுணவக்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படட மக்களுக்கென பாரிய அளவிலான நிதி அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் இந்த நிறுவனங்களுக்கு எவ்வளவு நிதி கிடைத்துள்ளது என்று நாம் கேட்கின்றோம். இந்த நிதியின் அளவு நாட்டு மக்களுக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியில் 40 சதவீதமேனும் பாதிக்கப்படட மக்களுக்கு வழங்கப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-8)

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனாதிபதி சந்திரிகா இரகசியப் பேச்சு

(கொழும்பு)

ஒரு வருட காலத்திற்கு இணைநது செயற்படும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸதர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து ஒருவருட காலத்திற்கு இணைந்து செயற்படுவதற்கும்,ஜனாதிபதி முறையை அகற்றுவதற்கும் இணங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக கடசியின் இந்த சிரேஷ்ட உறுப்பனர்கள் கட்சியின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிந்துகொளளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## குடாநாட்டில் கணவனை இழந்த பெண்களின் நிலை பரிதாபம் அரச மற்றும் தனியார் வங்கிகள் பல இருந்தும் சமூக மேம்பாட்டு உதவிகள் ஏதும் இல்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இயங்குகின்ற அரச மற்றும் தனியார் வங்கிகள், யுத்தத்தின் காரணமாகக் கணவன்மார்களை இழந்தநிலையில் இருக்கின்ற பெண்களின் வருமானமீட்டும் திட்டங்களுக்குக் கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில்லை.

இதனால் பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள் தமக்கான வருமான மீட்டும் திட்டங்களில் துணிகரமாகச் செயறபடமுடியாமல் இருக்கின்றனர்

என யாழ்ப்பாணததில் இயங்கி வருகின்ற மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப பணிப்பாளரான திருமதி சரோஜா சிவச்சந்திரன் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின உயர் அதிகாரியிடம் எடுத்துக்கூறியிருந்தார்.

அவர் மேலும் குறிப்பிடும்போது, இரு தசாப்தகாலமாக இடம் பெற்று வந்த யுத்தத்தின் காரணமாகக் குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் இருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் நிர்க்கதியான நிலையிலேயே இருந்துவருகின்றன.

இத்தகைய குடும்பங்கள் தமது வாழ்க்கைக்கான பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுததிக்கொள்வதற்கு நிதி ஆதாரமின்மை பெரும் தடையாக இருந்துவருகின்றது.

இந்நிலையில் பெண்கள் அபிவிருத்திக்கு உதவவேண்டிய அரச மற்றும் தனியார் வங்கிகள் இத்தகைய பெண்களின் முன்னேற்றத்துக்கு உதவுவதில்லை.

எனவே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கக்கூடிய பாதிக்கப்பட்ட பெண்களின் முன்னேற்றத்துகு ஆசிய அபிவிருத்தி வங்கி புதிய திட்டங்களை அறிமுகம்செய்ய முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

(ப-16)

## உழவு இயந்திரம், குடிநீர்பவுஸர் மட்டக்களப்புக்கு விநியோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் ஏனைய நிவாரணப் பணிகளை வழங்கும் நோக்கில் வடக்கு, கிழக்கு துரித புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் உழவு இயந்திரங்கள் மற்றும் குடிநீர் பவுஸர்கள் வழங்கப்பட்டுளளன.

மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான் குடி நகரசபை, ஏறாவூர் நகரம, வாழைச்சேனை, வாகரை பிரதேச சபைகளுக்கே உழவு இயந்திரங்கள் மற்றும் குடிநீர் பவுஸர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவியுடன் நீர்த்திட்டத்தின் கீழ் இந்த உபகரணஙகள் வழங்கப்பட்டிருப்பதாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-9)

## குருபூஜை விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வரும், நல்லைக் குருமணியுமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சமபந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 24ஆவது ஆண்டு குருபூஜை ஆராதனை விழா நாளை வெள்ளிக்கிழமை குருமூர்த்தி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

மு.ப.10 மணிக்கு யாகபூஜையும், 11 மணிக்கு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமிக்கு சஙகாபிஷேகமும், நண்பகல் மகேசுவர பூஜையும இடம்பெறும் மாலை 4மணிக்கு இசைக கச்சேரி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(க)

# இன்று ஒரு தகவல்

## இன்பப் புதையல்

ஒருவெளி தேசத்தில் இருந்து ஒருவர் நமது நாட்டுக்கு வந்தார். இங்கே ஒருவர் அவரை அன்பாக கூப்பிட்டு உபசரித்தார். ஒரு ஆரஞ்சுப் பழத்தை அவரிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். அவர் அதை வாங்கி அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தார். அவரது தேசத்தில் அது இல்லைப்போலிருக்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை. கடித்துப்பார்த்தார் கசப்பாக இருந்தது. தூக்கி எறிந்து விட்டார்.

"ஏன் அதைத் தூக்கி எறிந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார் இவர். "கசக்கிறது! அதை எப்படிச் சாப்பிடுவது?" என்று கேட்டார் அவர். "அதை அப்படிச் சாப்பிடக் கூடாது மேலே உள்ள தோலை நீக்கி எறிந்து விட வேண்டும். இனிப்பான பகுதி உள்ளே இருக்கிறது" என்று விபரம் கூறினார் நமது ஆள்.

இதனைச் சொன்னவர் ஒரு யோகி வாழ்வின் வெளிப் பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்தால் கசப்பான பிரச்சினைகளையே சந்திக்க வேண்டியிருக்கும். உள்பக்கத்திற்குப போகவேண்டும். அப்போதுதான் அங்கே உள்ள இனிப்பை உணர முடியும் என்கிறார் அந்த யோகி.

நாம் இரண்டு வகையான வாழ்க்கை வாழ்கிறோம். மேலோட்டமான வெளிப்படையாக உள்ள வாழ்வு என்பது ஒன்று. உள்ளார்ந்த வாழ்வு என்பது ஒன்று வாழ்வின் வெளிப்புறம் பிரச்சினைகளும் சவால்களும் நிறைந்தது. உட்புறம் அமைதியாக உள்ளது. இந்த உள்பக்கத்தில் தான் மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தேவையான புதையல் இருக்கிறதாம். யார் கண்டார்கள் அந்தப் புதையலை? ஆழ்நிலை தியானம் செய்கிறார்களே... அது எதற்காக? அந்தப் புதையலைக் கண்டுபிடிப்பதற்காகத்தான்.

நாம் அந்த உட்பக்கத்திற்குப் போய் அங்கே உள்ள ஊக்க சக்தியையும், புத்திசாலித்தனத்தையும் பொறுக்கி எடுத்து அன்றாடவாழ்வில் உபயோகப்படுத்த வேண்டும். மனம் ஒரு குரங்குமாதிரி அலைபாய்கிறது என்கிறோம். அதைக்கட்டுப்படுத்த முடியவில்லை என்கிறோம். மனம் அலைவது உண்மைதான் தேனீ எதற்காக அலைகிறது? தேனீக்காக அலைகிறது. அதுபோல்தான் மனமும் அலைகிறது..மகிழ்ச்சி, சாந்தி போன்றவற்றைத் தேடி மனதை உட்பக்கமாக அலையவிடவேண்டும்.

மகிழ்ச்சியான வாழ்வுக்கு என்னென்ன தேவை என்பதையும் அந்தயோகி சொல்கிறார். ஊக்கம், புத்திசாலித்தனம், அமைதி, சாந்தம் இவையாவும் நம்மிடமே, நமக்குள்ளேயே உள்ளன. அதனால்தான் சொர்க்கம் நமக்குள்ளேயே இருக்கிறது என்று சொல்வார்கள். புதையலை நமக்குள்ளேயே வைத்துக்கொண்டு அதைத் தேடி புலம்பிக் கொண்டிருப்பது மிகுந்த வேடிக்கை என்கிறார் அவா.

இவற்றைக் கேட்கும்போது உங்களில் பலருக்கு கோபம் கூட வரலாம். "என்ன சார் இது? இன்று ஒரு தகவலில ஏதாவது உபயோகமாகச் சொல்வீர்கள் என்று பார்த்தால்... என்னமோ தத்துவத்தைப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே என்று நினைக்கலாம். இதுவும் உபயோகமான விஷயம்தான்.

நாம தியானம் என்று எதுவும் செய்யாவிட்டாலும் கூட மனதில் அழுத்தமோ இறுக்கமோ இல்லாமல் எப்போதும் சந்தோஷமாக இருக்கப் பழகிவிட்டால் போதும் ஏனென்றால் மன இறுக்கத்தினாலேயே ஏகப்பட்ட நோய்கள் வருகிறதாம். பெருவாரியான உடற்கோளாறுகளுக்கு வாழ்வின் விரக்தியாலும், தோல்விகளாலும் ஏற்படும் மன இறுக்கம்தான் காரணம் என்பது மருத்துவ ஆராய்ச்சியின முடிவு. "நான் இறுக்கம் இல்லாமல் இருப்பதற்குத்தான் ஆசைபபடுகிறேன். இந்த சமூகம் அதற்கு இடம் கொடுக்கவில்லையே என்ன செய்வது?" என்பது சிலரின் கேள்வி இந்த சமூகத்தை சரிசெய்ய வேண்டியதும் நாம் தான். நம்மைச் சரி செய்யவேண்டியதும் நாம் தான். நான் சரியாக இருக்கிறேன் சமூகம் சரி இல்லை என்று அதை ஒதுக்கிப் பயனில்லை.

ஒரு குடும்பஸ்தர் மனதில் எப்போதும் டென்ஷன் இல்லாமல் இருக்கப் பழகிக் கொண்டார். அவர் சொல்வார் "நான் ஒன்றும் ஆழ் நிலை தியானம் செய்யவில்லை... இருநதாலும் என்மனது எப்போதும் அமைதியாகத்தான் இருககிறது. இவ்வளவுக்கும் எங்கள் வீட்டில் என் மனைவிககும என் அம்மாவுக்கும் தினமும் சண்டை வரும்" என்றாா.

"அது சரி..உங்கள் அம்மா ஒரு பக்கம் உங்கள் மனைவி ஒரு பக்கம். அவர்கள் இருவரும் சண்டையிடும் போது நீங்கள் எந்தப் பக்கம் இருப்பீகள்?" என்று கேட்டார் ஒருவர். "அந்தச சமயம் நான் வீட்டுக்கு வெளிப்பக்கம்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அம்பாறை சேனைக்குடியிருப்பில் இடைத்தங்கல் முகாம் திறந்துவைப்பு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

(அம்பாறை)

அம்பாறை சேனைக்குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டிமுடிக்கப்பட்ட தற்காலிக குடிமனைகளைக் கொண்ட மற்றுமொரு குடியிருப்பினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மக்களிடம் கையளித்துள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முகமாகவும், பொருத்தமான வாழ்விடங்களை அமைத்துகொடுக்கும் முகமாகவும் அம்பாறை மாவட்டத்தில் 08 இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்து வருகிறது.

அதன் தொடர் வேலைத்திட்டச் செயற்பாடாக சேனைக் குடியிருப்பில் அமைக்கப்பட்ட இடைக் காலக் குடியிருப்பினை மக்களுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 4.30 மணியளவில் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் வீ.இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளர் வாசுதேவனும், கிராம சேவகர் எஸ்.அருள்ராசாவும், கிராம சேவகர் எஸ்.மோகனும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பொது மக்களும் என பெரும்பாலானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுச் சுடர்கள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. இதனையடுத்து குடியிருபபின் பெயர்ப்பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக உத்தியோகத்தர் வீ.இராஜேந்திரம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தற்காலிகக் குடிமனைகளை திறந்துவைக்கும் நிகழ்வில் முதலாவது வீட்டினை கல்முனைப் பிரதேச செயலாளர் வாசுதேவன் திறந்துவைக்க, இரண்டாவது வீட்டினை தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பொறியியலாளர் சிவராசா திறந்து வைத்தார்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி வே.கருணாகரன் உரையாற்றுகையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு தொடர்பான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதென்பது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு புதியதொரு செயற்பாடல்ல இது போன்ற எவ்வளவோ வேலைத்திட்டங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எமது தாயகப்பிரதேசத்தில் மேறகொண்டு வருகின்றது.

நாம் மக்களுக்கான புனர் வாழ்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எப்போதுமே பின்னிற்கப்போவதில்லையென்று அவர் குறிப்பிட்டதுடன், இதுபோன்ற செயற்பாடுகளுக்கூடாக எமது மக்களுக்கு வீடுகளைக்கையளிப்பதையிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் தானும் பெருமைப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கல்முனை தமிழ்ப்பிரதேச செயலாளர் வாசுதேவன் உரையாற்றுகையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது நாங்கள் எப்போதும் எதிர் பார்த்ததை விடவும், இந்த சமுதாயம் எடைபோட்டு வந்த மதிப்பீட்டிலிருந்தும் மிகவும் தீவிரமாகவே தனது வேலைத் திட்டச் செயறபாடுகளுக்கூடாக மேலோங்கியுள்ளது. அதன் அண்மைககாலச் செயற்பாடுகள் எமக்கும், வெளியுலகிற்கும் அவற்றையே தெளிவுபடுத்துகின்றன எனவும் ஆழிப் பேரலையின தாக்கத்தினைத் தொடர்ந்து உடனடியாகக் களத்திலிறங்கி உடனடி நிவாரண உதவிகளை வழங்கியதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே எனத் தெரிவித்ததோடு தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பணியினைத் தொடருமென்றும் வீடுகளைப பொறுப்பேற்ற மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார்.

இதனையடுத்து வீடுகளுக்கான திறப்புக்கள் அந்தந்த குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டன. (ப)

# ஜனாதிபதி முறையை ஒழிக்க வாக்கெடுப்பு ஏற்கமறுக்கிறது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையினை ஒழிக்கும் நோக்கில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வஜன வாக்கெடுப்பினை நடத்துவதனை நாம்




ஏற்றுக் கொள்ளப் போவதில்லை சர்வஜன வாக்கெடுப்பினால் எந்தப் பயனும் இல்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து கேட்டபோதே கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தற்போதைய நிலையில் சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து பேச வேண்டிய அவசியம் எமக்கில்லை. சுனாமி நிவாரணம் தொடர்பாக பொதுக் கட்டமைப் பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்க வேண்டும். இவைதான் எமக்கு இன்று முக்கியமாகும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு குறித்து பேசுவதற்கு முன் னர் எமது முக்கிய விடயங்களுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.



நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையினை இல்லாதொழிக்கும் நோக்கில் ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த முயன்றால் அதனை நாம் ஏற்றுக கொள்ள மாட்டோம் சர்வ ஜன வாக்கெடுப்பினை நடத்துவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம் பலம் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் எமக்கு சுனாமி நிவாரணம் தொடர்பான பொதுக் கட்டமைப்பும், இடைக் கால நிர்வாக சபையும் அமைக்கப்படவேண்டும். இதுவே முக்கியமானதாகும். நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையினை மாற்றி அமைப்பதற்காக மட்டும் ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த முயற்சிக்கிறார்.

இது சுயநல அரசியல் நோக்கம் கொண்ட செயற்பாடாகும். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடி யாது என்றும் அவர் கூறினார். (ப)

# தாயக கலைஞர்கள் 19 பேர் நோர்வேயில்

(கொழும்பு)

தெருவழி நாடகங்கள் மூலம் தமிழீழ விடுதலைப் போராடடத்திற்கு பெரும் பங்காற்றிய விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் "தாயக விடுதலைப் பறவைகளின்" 19 கலைஞர்கள் மாலை நோர்வே சென்றுள்ளனர்.

நோர்வேயில் தாயகக் கலைஞர்கள் பங்கேற்கும் பிரமாண்ட எழுச்சி நிகழ்வு ஒன்று இடம் பெறவிருக்கினறது. இதில் பங்குகொள்வதற்காகவே இவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இந்தக் கலைஞர்கள், தமிழீழ தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தெருவழி நாடகங்களை நிகழ்த்தி தமிழீழ விடுதலைப் போரட்டத்திற்கு பெரும் பலத்தைச் சேர்த்த தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப்பிரிவுக் கலைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான வரவேற்புச் சந்திப்பு ஒஸ்லோவில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூட மண்டபத்தில் இன்று மாலை இடம்பெற்றது.

எதிர்வரும் சனிக்கிழமை சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வில், புதுவை அன்பனின் நெறியாள்கையில் "கரைதேடும் ஓடங்கள்", பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் "சூரிய தேவியின் சோகங்கள்" ஆகிய நாடகங்கள் அரங்காற்றுகை செய்யப்படவுள்ளன என்பதோடு தாயக எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்படவுள்ளன. இந்நாடகங்கள் தாயக மண்ணில் எண்ணற்ற அரங்குகள் கண்ட நாடகங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும்20ஆம் திகதி நோர்வேயின் இன்னொரு நகரான பர்கனிலும் தாயகக் கலைஞர்கள் பங்கேற்கும எழுச்சி நிகழ்வு இடம்பெறுகினறது என்பதும் குறிப்பிடததக்கது. (ப)

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)


யாழ் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு இன்று நடைபெறவிருந்த முக்கிய கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திப்போடப்பட்டுள்ளது பிற்போடப்பட்ட கூட்டத்தின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 10



### அத்தியாயம் IV

***முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள்***

பொது அலுவல் ஆரம்ப நேரப் பிரேரணைகள் அமர்வு நேர மாற்றங்கள் அல்லது முன்னறிவித்தல் கொடுக்க வேண்டிய தேவையை ஒழித்தல் தொடர்பானவை. சபையின் வழமையான அலுவலை அல்லது அமர்வு நேரங்களை மாற்றுகின்ற நடைமுறை சார்ந்த பிரேரணைகளுக்கு. நிலையியற் கட்டளை 23 இல் குறித்துரைக்கப்பட்டவாறு முன்னறிவித்தல் தேவையில்லை. இப் பிரேரணைகள் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்கான நிலையியற் கட்டளை 135 இன் கீழ் சபையின் அங்கீகாரத்துடன் எடுத்துக் கொள்ளப்படலாம். ஒழுங்குப் பத்திரத்தில் அத்தகைய பிரேரணைகளுக்கான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு சபை முதல்வராலோ அரசாங்க அமைச்சர் ஒருவராலோ பிரேரிக்கப்படுகின்றது. அத்தகைய ஒரு பிரேரணை அமைச்சர் ஒருவரால் பிரேரிக்கப்படாவிட்டால் அது வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும். வாக்கெடுப்பில் பிரேரணையை ஆதரித்து இருபதுக்குக் குறைவான உறுப்பினர்களே பெரும்பான்மையினராக வாக்களித்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படலாகாது.

நிலையியற் கட்டளை 8 குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அலுவலுக்கு நிலையியற் கட்டளை 7 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது. நிலையியற் கட்டளை 7 அலுவல் நாட்களும் நேரங்களும் பற்றிக் கூறுகின்றது. (பாராளுமன்றத்தில் அலுவல் நடத்துதலைப் பார்க்க) எனவே அமர்வு நேரங்களை நீடிப்பதற்கான ஒரு பிரேரணையைப் பிரேரிக்கும் முன்னர் நிலையியற் கட்டளை 7 இடைநிறுத்தப்படவேண்டும். நிலையியற் கட்டளை 7 அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட பின்னர் பிரேரணை மாற்றப்பட்ட ஒத்திவைப்பு நேரத்தைக் குறித்துரைக்கலாம்.

சபைக்குப் போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்படாத ஒரு விடயத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையேற்படின் நிலையியற் கட்டளை 23 (3) இன் ஏற்பாடுகளை இடைநிறுத்துகின்ற ஒரு பிரேரணை பிரேரிக்கப்படவேண்டும்.

எனவே அமர்வு நேரங்கள் தொடர்பான நடைமுறையையும் முன்னறிவித்தல் தொடர்பான தேவைப்பாடுகளையும் சில வரையறைகளுக்குள் கட்டுப்படுத்துவதற்குச் சபைக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

முன்னறிவித்தல் தேவைப்படாத பிரேரணைகள் குழுக்களின் ஆக்க அமைவு மற்றும் நடைமுறைசார்ந்த ஒத்த விடயங்கள் தொடர்பானவையாகவும் இருக்கலாம்.

***ஒத்திவைப்பு பிரேரணைகள்***

நிலையியற் கட்டளை 17 இன் கீழ் பிரேரிக்கப்படும் ஒத்திவைப்புப் பிரேரணைகள் சபை குறிப்பிட்ட ஒரு விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடியதாக அது விசேடமாக ஒத்திவைக்கப்பட்ட பின்னர் அவ்வாறு பிரேரிக்கப்படுகின்றன. அது பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயங்களைக் குறுகிய அறிவித்தலில் தனியார் உறுப்பினர்கள் எழுப்புவதற்கான மிகப் பயனுள்ள ஒரு முறை. இவ்வேற்பாட்டின் கீழ் கேள்வி நேரம் முடிவடைந்ததன் பின்னர் பொது அலுவல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மட்டும்தான் அத்தகைய ஒரு பிரேரணையைப் பிரேரிக்க முடியும்.

ஒத்திவைப்புப் பிரேரணையொன்றைப் பிரேரிப்பதற்குப் பின்வரும் இரு வழிமுறைகளில் ஒன்று பின்பற்றப்பட வேண்டும். அதாவது ஓர் உறுப்பினர் இந்நோக்கத்துக்காகச் சபாநாயகருக்கு எழுத்தில் அறிவித்து அவரின் அனுமதியையும் பின்னர் சபையின் அனுமதியையும் பெறலாம். அல்லது சபையின் அனுமதி பெறப்படாவிட்டால் பிரேரிப்பதற்கு ஆதரவாகக் குறைந்த பட்சம் இருபது உறுப்பினர்கள் சபையில் எழுந்து நிற்க வேண்டும். அவ்வாறு பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அது பி.ப.2.30 மணிக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். எனினும் அனேக சந்தர்ப்பங்களில் சபை ஒத்திவைப்புப் பிரேரணைகள் மீதான விவாதங்களை எடுத்துக்கொள்ளும் பொருட்டுக் காலையில் கேள்வி நேரத்தின் பின்னர் உடனடியாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தனியொரு நாளில் அத்தகைய ஒரு பிரேரணை மட்டும் தான் பிரேரிக்கப்படலாம்.

எனினும் சபாநாயகரின் ஆழ்ந்தாராய்ந்த அபிப்பிராயத்தில் அது ஒழுங்கற்றதெனக் கருதினால் அத்தகைய பிரேரணைக்கு அனுமதியளிக்க மறுக்கலாம் அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர் அவ்விடயத்தை எழுப்புவதற்கு அனுமதி வழங்கி அதன் பின்னர் தமது ஒப்புதலை வழங்க மறுத்தமைக்கான காரணங்களை அவர் கூற வேண்டும். நிலையியற் கட்டளை 17 இன் கீழான இந் நடைமுறை அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

***ஒத்திவைப்பு நேரப் பிரேரணைகள்***

நாளாந்த ஒத்திவைப்பு நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படும் பிரேரணைகளை நிலையியற் கட்டளை 17இன் கீழான ஒத்திவைப்புப் பிரேரணைகளுடன் குழப்பிக் கொள்ளலாகாது. பாராளுமன்றம் பி.ப.3.30 மணிக்கு ஒத்திவைக்கப்படும்போது பரிசீலனையிலிருக்கும் பிரதான அலுவல் இடைநிறுத்தப்பட்டு வேறு எதிர்ப்பற்ற அலுவல் பி.ப 4.30 மணி வரை எடுத்துக்கொள்ளப்படலாம். பல ஆண்டுகளாக ஒத்திவைப்பு நேரத்தில் பத்துக் கேள்விகளை எடுத்துக்கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது. எனினும் 1995 இல் தனியோர் ஒத்திவைப்புப் பிரேரணையை விவாதிக்கும் வழக்கம் கைக்கொள்ளப்பட்டது. அத்தகைய ஒத்திவைப்புப் பிரேரணைகள் பொது முக்கியத்துவமுள்ள அவசர விடயங்கள் பற்றியனவாக இருக்கவேண்டும் . ஒத்திவைப்பு நேரக் கேள்விகள் கூடப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றியனவாக இருக்கவேண்டும். அவை காலையில் எழுப்பப்படும் வினாக்களை ஒத்தவை. இக்கேள்விகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரை நோக்கியவையாக இருக்க வேண்டுமென்பதுடன் அவை ஒரு விவாதத்துக்கான சாக்காகவும் ஆக்கப்படக்கூடாது.

ஒத்திவைப்பு நேரப் பிரேரணைகள் வழிமொழியப்படவும் விவாதிக்கப்படவும் இறுதியில் சம்பந்தப்பட்ட அமைச்சரால் பதிலளிக்கப்படவும் வேண்டும். நாளாந்த ஒத்திவைப்பு நேர விவாதத்தின் போது முப்பது நிமிடங்கள் எதிர்க்கட்சிக்கும் முப்பது நிமிடங்கள் அரசாங்கத்துக்கும் ஒதுக்கப்படுகின்றது.

அத்தகைய பிரேரணைகள் பற்றி முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும். அவை செயலகத்தினால் சபை முதல்வருக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சர்கள் அவற்றிலிருந்து எழக்கூடிய அத்தகைய வினாக்களுக்குத் தமது பதிலைத் தயாரிக்கக்கூடியதாகச் சபை முதல்வர் அவற்றை அவ்வமைச்சர்களுக்கு வழிப்படுத்துவார். அத்தகைய அறிவித்தல் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தினத்துக்கு முதல் நாளன்று செயலகத்துக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. ஒழுங்குப்பத்திரத்தில் முன்னறிவித்தல் கொடுக்கின்ற வழமையான முறை இதில் எழமாட்டாது. ஒத்திவைப்புப் பிரேரணைகள் நடைமுறையில் அக்கறைக்குரிய குறுகிய நோக்கமற்ற விடயங்கள் தொடர்பானவையாக இருக்க வேண்டுமேயன்றி விவாதங்களின் போது எழுப்பப்பட்ட விடயங்களாகவோ வாய்மூல வினாக்கள் மூலம் எழுப்பப்படக் கூடிய விடயங்களாகவோ இருக்கக்கூடாது. அவை அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பானவையாக இருக்கவேண்டும். இவ்வம்சங்கள் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும் ஒரு விடயத்தின் முக்கியத்துவத்தைத் தீர்மானிப்பதற்குத் திட்டவட்டமான விதிகளை வகுக்கமுடியாது. வெறும் தனிப்பட்ட மனக்குறையொன்று பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகிவிடாது. அது பொதுக்கோட்பாடு பற்றிய ஒரு விடயமாக பரிகாரமொன்றைக் காணும்படி அரசாங்கத்தை வற்புறுத்தக் கூடிய ஒரு விடயமாக இருக்கவேண்டும். அதேவேளையில் அவ்விடயம் அவசரமானதாகவும் இருக்கவேண்டும் . அது அண்மையில் இடம்பெற்ற ஓர் அவசர நிலைமைக்குரியதாக அல்லது ஏற்படக்கூடிய ஒரு பேரழிவு தொடர்பானதாக இருக்க வேண்டுமென்பதே இதன் கருத்து அது சபை கூடுகின்றபோது கிடைக்கக்கூடிய முதற் சந்தர்ப்பத்திலேயே எழுப்பப்படவும் வேண்டும். (தொடரும்)

# ஆழிப்பேரலை நிதி உதவியாக ஐந்து சதம் கூட கிடைக்கவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஆழிப்பேரலை நிதியுதவியாக இதுவரை வெளிநாடுகளிலிருந்து ஐந்து சதமேனும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை மத்திய வங்கியில் ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வைப்புக் கணக்கில் 110 கோடி ரூபா கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்காலையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அரசிற்கு பெருமளவு நிதி கிடைத்திருப்பதாகவும், அதனை அரசாங்கம் மறைத்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை.

அனர்த்தம் இடம்பெற்ற மூன்று மாதங்கள் நிறைவடைவதற்கு பத்ச[illegible] தினங்களே உள்ள நிலையில் ஜனாதிபதி செயலகத்தினால் மத்திய வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட வைப்புக் கணக்கில் 110 கோடி ரூபா வரை கிடைத்திருப்பதாகவும், இதனை வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ப)

# செட்டிப்பாளையத்தில் இளைஞர் சுட்டுக் கொலை

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு - கல்முனை வீதி செட்டிப்பாளையத்தில் நேற்று முன்தினம் இரவு 23 வயது இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

செங்கலடியைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெயகணேஸ் என அடையாளம காணப்பட்டுள்ள இவரது சடலம் தற்போது களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கட்டடத் தொழிலாளியான இவர் தொழில நிமித்தம் காரணமாக செட்டிப்பாளையத்திற்கு வந்திருந்த சமயம் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நபர் ஏற்கனவே தமிழ்க்குழுவொன்றில் உறுப்பினராக இருந்ததாக பொலிஸ் தரப்பு சந்தேகிக்கின்ற போதிலும் இதுவரை அது உறுதிப்படுத்தப்படவில்லை. (ப)

# வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் சுருட்டும் திருடர்கள்!

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியில் வேலை எடுத்துத் தருவதாகக் கூறி யாழ். நகரில் சிலர் பண மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக யாழ. ஹற்றன் நஷனல் வங்கி அறிவித்துள்ளது.

வேலை எடுத்துத் தருவதாகக் கூறி ஏமாற்றுப் பேர்வழிகள் சிலர் இளைஞர், யுவதிகளிடம் பணத்தைப் பெற்று வருவதாகத் தமக்கு பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள வங்கி நிர்வாகம், தாம் எந்தவொரு பதவி வெற்றிடம் குறித்தும் அறிவிக்கவில்லை என்றும், இவ்வாறான சம்பவங்களுக்கும் வங்கிக்கும் எதுவித தொடர்புமில்லை என்றும் அறிவித்துள்ளது. இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பணத்தைச் கொடுத்து மோசமடைய வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர். (ரு)

## வட-கிழக்கு மாகாணத்தில்

# 55 சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிப்பு

(கொழும்பு)

சுற்றாடல் இயற்கை வள அமைச்சு பிரதேச செயலகங்கள் தோறும் 126 சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்கவுள்ளது.

சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந் நியமனத்தின் நோக்கமாகும்.

இந் நியமனங்களில் சுனாமியால பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு தென்மாகாணங்களுக்கு முக்கியதத்துவமளிக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மகாணத்தில் 55 சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் ஏனைய பிரதேசங்களில் 71 உத்தியோகத்தர்களையும் நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞானம்,சமுகவியல்துறை சார்ந்த பட்டதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (ர-7)

# ப.நோ.கூ. சங்க நெறியாளர் சபை தேர்வுக்கான கூட்டம்

(கரணவாய்)

சுனாமி அனர்த்தம் காரணமாக கடந்த 3 மாதங்களாக பின்போடப்பட்டுவந்த உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் சபைத் தேர்வுக்கான கூட்டம் கடந்த 27ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இத்தேர்வில் சி. கணபதிப்பிள்ளை ஜே.பி. தலைமையில ஓர் அணியும்வெ.தர்மகுலசிங்கம் தலைமையில் ஓர் அணியுமாக இரு அணிகள் போட்டியிட்டன.


கணபதிப்பிள்ளை தலைமையிலான அணியில் 6 உறுப்பினர்களும் தாமகுலசிங்கம் தலைமையிலான அணியில் தர்மகுலசிங்கம் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் தலைவராக சி.கணபதிபபிள்ளை ஜே.பியும் உபதலைவராக க.இரத்தினம் ஜே.பியும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக க.நாகலிங்கம் , பொ.குணசிங்கம் ஜே. பி., பொ.குகதாஸ்ஜே.பி.,செல்வி சி.கவிதா,வெ.தர்மகுலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (து)

சுனாமி அனர்த்த நிவாரணப் பகிர்வில்

# சர்வதேச அக்கறையைத் தூண்டுவதே எமது ஐரோப்பிய பயணத்தின் நோக்கம்



## பி.பி.சி. தமிழோசைக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் கருத்து

(லண்டன்)

**இனப்பிரச்சினைகளுக்கான தீர்வில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகள் மற்றும் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின்ற பொழுது அதில் வருகின்ற சிக்கல்கள் பற்றி சர்வதேச நாடுகளுக்கு விளக்கி வரு கின்றோம்.**

**அத்தோடு சுனாமி அனர்த்தத்துக்குப் பின்னர் சர்வதேச உதவிகளை எங்களுடைய தாயகப் பிரதேசத் துக்கும் திருப்புவதற்கும் சர்வதேச சமூகத்தினுடைய அக்கறையைத் தூண்டும் முகமாகவே நாங்கள் எங் களுடைய பயணத்தை மேற்கொண்டுள்ளோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய விஜயம் குறித்து பி.பி.சி. தமிழோசைக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட எங்களுடைய பிரதேசங்களுக்கு எந்த விதமான சர்வதேச உதவிகளும் வழங்கப்படவில்லை. எங்களுடைய பிரதேசமே சுனாமியினால் பாரிய அழிவுகளினைச் சந்தித்துள்ளது.

ஏற்கனவே யுத்தத்தாலும் பெரும் அழிவினைச் சந்தித்த பிரதேசம் எனறவகையிலும், சுனாமயினாலும பேரழிவனைச் சந்தித்திருக்கின்ற ஒரு பகுதியென்ற வகையிலும் எங்களுடைய பகுதிகளுக்கு சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே நாங்கள் இந்தப் பயணத்தினை மேற்கொண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகளும், அரசும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதில் நோர்வே அரசு உறுதியாகவும், ஆர்வமாக இருப்பதை வெளிவிவகார அமைச்சரின் சந்திப்பின்போது அறிந்து கொள்ள முடிந்தது.

இருதரப்பும் இணைந்து, அதற்கூடாக சர்வதேச உதவிகளைப் பகிர்வதற்கு மிகவும் அக்கறையுடன் நோர்வேத் தரப்பு உள்ளது.

ஏற்கனவே இருதரப்பும் நோர்வேத் தரப்பின் ஊடாக நடாத்திய ஆலோசனைகளின் அடிப்படையில் எந்தவிதமான தீர்வும் ஏற்படாத நிலையில் நோர்வேத் தரப்பு ஒரு ஆக்கபூர்வமான ஆலோசனையினை எம்மிடம் முன்வைத்துள்ளது.

அதனை எம்முடைய தலைமைப் பீடம் சாதகமாகப் பரிசீலித்து எங்களுடைய இணக்கப்பாட்டினைத் தெரிவித்திருக்கின்றோம். அரசின் பக்கத்திலிருந்து பதில் கிடைக்காததன் காரணமாக அதன்மூலம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டுக்கு வர முடியாத சூழ்நிலையில் இருக்கின்றது.

அந்த வகையில் நோர்வே வெளிவிவகார அமைச்சரோடு உரையாடிய போது அவர்கள் மிகுந்த அக்கறையையும் ஆர்வத்தையும் கொணடிருப்பதை உணரக்கூடியதாகவிருக்கின்றது.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் யுத்தத்தால் கடந்த இருதசாப்த காலமாக மனிதாபிமான நெருக்கடியினைச் சந்தித்துள்ள மக்களுக்கு உடனடியாக இப்பிரச்சினைகளுக்குத தீர்வு காணவேண்டிய தேவையின் அடிப்படையில்தான் இடைக்காலத் தீர்வு யோசனையினை முன்வைத்தோம். அதன் அடிப்படையில் பேசவும் நாங்கள் தயார் என்பதைக் கூறியிருந்தோம்.

அவற்றின் பின்னால் சுனாமி அனாத்தம் ஏற்பட்டு எங்களுடைய தேசத்தின் பெரும்பகுதி, எங்களுடைய கரையோரப் பகுதியை முழுதாக அழித்துள்ளது. இந்த மோசமான மனிதாபிமான நெருக்கடியினை எங்களுடைய மக்களும், எஙகளுடைய தேசமும் சந்தித்துள்ளது.

இந்த நிலையில் நாங்கள் உடனடியாக இந்த மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பற்றியே நாம் கூடுதலான அக்கறையும், கரிசனையும் கொண்டிருக்கினறோம். நோர்வேத் தரப்பிடம் இதனையே எடுத்து விளக்கியுள்ளோம. ஆனால் சமாதானப் பேச்சுக்களைத தொடங்குவது பற்றி பெரிதாக அவாகளோடு விவாதிக்கவில்லை. உடனடி மனிதாபிமானத் தேவைகளை எப்படிக் கையாள்வது பற்றியே அன்றைய சந்திப்பில் விவாதித்தோம் எனத்தெரிவித்தார். (ப-4)

## கிழக்கு வன்முறைகள் குறித்து ஆராய விசேட விசாரணைக் குழு நியமனம்

(மட்டக்களப்பு)

அண்மைக்காலங்களில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு இரு அங்கத்தவர்களைக் கொண்ட விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளது.

இவ் விசேட விசாரணைக் குழுவில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தவிசாளராகவும்,அம்பாறை மேல்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ .பி.எம்.பி.பி வராவெவ உறுப்பினராகவும் இடம்பெறுகின்றனர்.

இக்குழு சகல தரப்பினரிடமிருநதும் சாட்சியங்களைப் பெற்று இத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராயவுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இம் மாதம் 2 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றிய சாட்சியங்கள் இடம்பெறவுள்ளன.

இவை அம்பாறை நீதிமன்ற வளவில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் முதலாம் திகதி வரையும் மட்டக்களப்பு நீதிமன்ற வளவில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளன.

இவ் விசாரணைகளின் போது சாட்சியமளிக்க விரும்புபவர்கள் அல்லது ஏழுத்து மூலம் சான்றுகளை முன்வைக்க விரும்புகின்றவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அதன் செயலாளர் எம்.ஆர். கலீல் அறிவிததுள்ளார். (ந-7,4)

### ஆங்கில பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தினரால் ஆங்கிலப் பயிற்சிப் பரீட்சை நடாத்தபபடவுள்ளது.

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தரம்-9, தரம்-10 மாணவர்களுக்கே இவ் ஆங்கில பயிற்சிப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடாத்தப்படவுள்ளது.

மாணவர்களுடைய ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்குடனேயே யாழ். கல்வி வலயத்தினால் இவ் ஆங்கில பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டு இலவசமாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் தரம்-9 மாணவர்களுக்கு மட்டுமே இவ் ஆங்கில பயிற்சிப் பரீட்சை நடாத்தப்பட்டது. ஆனால், இவ்வருடம் தரம்-9, தரம-10 மாணவர்களுக்கும் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

## பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி செயலக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலக ஊழியர்கள தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி கடந்த திங்கட்கிழமை முழுநாள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டதன் காரணமாக செயலகத்தின் வழமை நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று பிரதேச செயலகத்திற்குள் பிரவேசித்த பொதுமக்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்கள் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

மறுநாள் பிரதேச செயலகத்திற்கு ஊழியர்கள் வருகை தந்த போதிலும் வழமையான பணிகள் எதிலும் ஈடுபடவிலலை. செயலகத்திற்கு வெளியே அவர்கள் காணப்பட்டனர்.

ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை பிரதேச செயலக அதிகாரிகள விநியோகிக்காமல் குழி வெட்டிப் புதைத்ததாக பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

பிரதேச செயலாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸாரால் ஊடகஙகளுக்குத் தெரிவித்த உண்மைக்குப் புறமபான தகவல்கள் குறித்தும ஊழியரகளினால் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார சேவைகள் திணைக்களத்தில் தொண்டர் அடிப்படையில் பணியாற்றும் 121 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு சுகாதார சேவைகள் திணைக்கள பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். (ந)

## தற்காலிக குடியிருப்புகள் மக்களிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பேரழிவுக்குள்ளாகி வாழவிடங்களையும், வாழ்வாதாரங்களையும் இழந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தற்காலிக குடிமனைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துவருவதோடு அவ்வப்போது மக்களைக் குடியமர்ததி அவர்களது தேவைகளையும் நிவர்த்தி செய்து வருகினறது.

இந்த வேலைத்திட்டப் பணிகளின மற்றுமொரு தொடர் நடவடிக்கையாக கடந்த சனிக்கிழமை மூன்று குடியிருப்புகள் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் அம்பாறையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

காரைதீவு மூன்றாம் குறிச்சியில் 30 குடிமனைகளும், காரைதீவில் 70 குடிமனைகளும், ஆலையடிவேம்பில் 30 குடிமனைகளுமாக மொத்தம் 130 தற்காலிகக் குடிமனைகளைக் கொண்ட மூன்று குடியிருப்புகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ந)

## கொழும்பு நீதிமன்றில் இந்திய நிபுணர் சாட்சியம்

(கொழும்பு)

கையெழுத்துக்களை இனங்காணுவதில் நிபுணத்துவம் பெற்ற இந்திய கையெழுத்து வல்லுநர் ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கொன்றில் சாட்சியமளித்துளளார்.

ராயகிரிய ஒபயசேகர பிரதேசத்தில அமைந்துள்ள புராதன வீட்டிற்கான போலி உறுதிப்பத்திரத்தை தயாரித்தமை தொடர்பான வழக்கு விசாரணையில் பேராசிரியர் சந்திரசேகரன் என்ற கையெழுத்து நிபுணா சாட்சியமளித்தார்.

சட்டமா அதிபா் தொகுத்த இவ வழக்கில் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளரான பந்துல விஜயசிங்க, இராணுவத்தின் முனனாள் பேச்சாளா் கேணல் சுமேத்தாபெரேரா உட்பட மூவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனா்.

இவ்வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தமிழ் மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளக் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

எனவே அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம், கிராமசேவகரின் உறுதிப்படுத்தல் கடிதம், வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்துடன தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தொடர்பு கொள்ள இல. 155, கோவில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-ம)

## பயிற்றுவிப்பாளர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு புதிதாக ஐம்பது தொழில்நுட்ப பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனத்தை திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சர் பியசேன கமகே வழங்கியுள்ளார்.

தமிழ்,சிங்களப் பிரிவுகளுக்கென புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இவர்கள் இலவங்கையிலுள்ள 36 தொழில்நுட்பக் கல்லூரிகளில் தமது கடமைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தொழில் வழங்கும் திட்டத்திற்கமையவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் பியசேன கமகே தெரிவித்தார். (க-9)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டு அலுவலர்களுககுமான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து விளையாட்டு அலுவலர்களையும், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (ந-19)

# இனவாத அரசின் அராஜகங்களை மூடிமறைத்து ஐக்கிய நாடுகள் மன்றத்தில் கதிர்காமர் உரை

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கடும் கண்டனம்

**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடரின் உயர்மட்ட அரங்கில் நேற்று முன்தினம் ஆற்றிய உரையில் தெரிவித்த பொய்யான மற்றும் தவறான விபரங்களை சுட்டிக்காட்டி அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து அவ்வமைப்பு அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஆழிப்பேரலை நிவாரணப்பணிகள் இன்று முடங்கிக் கிடக்கும் நிலையினை மூடிமறைத்து, அது முழுவேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக கதிர்காமர் கூறியிருப்பதில் உண்மையெதுவும் கிடையாது.

மிகவிரைவாக ஆழிப்பேரலை புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இணைந்த நிர்வாக அமைப்பை உருவாக்குமாறு உலக நாடுகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. தெற்கிலும் கிழக்கிலும் மட்டுமே ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்டதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறிள்ளமை வடக்கில் ஏற்பட்ட அழிவுகளை அவர் இருட்டடிப்புச் செய்வதாகவுள்ளது.

மேலும், நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் பாராபட்சமின்றி ஆழிப்பேரலை உதவிகள் சென்றடைவதாக கூறியிருக்கும் அமைச்சர், ஐககிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனானை வடக்குக்குச் செல்லவிடாது தடுத்துள்ளார். இது அரச உதவிகள் தமிழ் பகுதிகளுக்கு செல்லவல்லை என்கின்ற உண்மை அம்பலமாகிவிடும் என்ற அச்சத்திலேயே இடம்பெற்றது என்பதையும் அனைத்துலக தமிழர் கூட்டமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள மீது குற்றஞ்சுமத்தும் கதிர்காமர், ஆயுதப் போர் நடைபெறும் இடங்களில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி ஐக்கிய நாடுகள் தெரிவித்து வரும் ஏற்பாடுகள் பற்றி எதுவுமே கூறாது மூடிமறைப்பது ஏன்.

சிறுவர்களை கொல்லுதல்-முடமாக்கல், பள்ளிகள் - மருத்துவமனைகளைத் தாக்குதல், பிள்ளைகள் மீதான பாலியல் வன்தாக்குதலகள், சிறுவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை மறுத்தல் போன்றவை ஐ.நா. ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் இவை அரசைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றி விடும் என்பதால் சாதுரியமாக அவர் அவற்றை மூடிமறைத்துவிட்டார். எந்தக் கதிர்காமர் சில ஆண்டுகள் முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையை நையாண்டி செய்து, 3 ஆவது உலக நாடுகளில் மலேரியாத் தடுப புப் பணியொன்றைப் புரியவே அது தகுதியுடையது என்று கூறிவிட்டு இன்றைய கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள சபையின் அபிலாசைகளைப பாராட்டிப் பேசியது வியப்பைத் தருவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## திருமணம்

மகாஞான ஒழுக்கத்தை முன்னிட்டு 5 தம்பிதியினருக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில்வைத்து அருட்தந்தை லம்பேட், அருட்தந்தை அன்புராசா இலவசமாக திருமணம் செய்து வைத்தனர்.

கடந்த 14ஆம் திக்தி நடைபெற்ற இன் நிகழ்வில் கிறீஸ்தவ மக்களிற்கு வழங்கப்படும் சடங்குகளான ஞானஸ்தானம், முதல் நன்மை, உறுதிபூசுதல் போன்ற அருட்சாதனங்களும் சுமார் 35 பேரிற்கு வழங்கப்பட்டது. (ப-51)

# உண்ணாவிரதப் போராட்டத்தில் மேலும் 10பேர் இணைந்தனர்

(திருகோணமலை)

சுனாமி நிவாரணங்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்குமாறு கோரி பிக்குமார் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் மேலும் அந்தப் பிரதேசத்தைச்சேர்ந்த பத்துப்பேர் இணைந்துள்ளனர்.

பிக்குமாரின் உண்ணாவிரதப் போராட்டததுக்கு அரசாங்கத்தினால் எந்தவித பதிலும் கிடைக்காமையினால் அந்தப் பிரதேச மக்களும் தாம் பேராட்டத்தில் இணைவதென்று தீர்மானத்தை எடுத்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அண்மையில் நடைபெற்றுவரும் இந்த உண்ணாவிரதப் போராட்டததில் பிக்குமார் உட்பட பதினாறு பேர் ஈடுபட்டுள்ளனர்

சுனாமி நிவாரண விநியோகப் பணியில் அரச அதிகாரிகளை ஈடுபடுத்தி முறையான கண்காணிப்பின் கீழ் நிவாரணங்களைப் பகிர்ந்தளிககுமாறும் திருகோணமலை நகரிலிருந்து மூன்று கிராமங்களை அமைப்பதற்கு எடுத்துள்ள தீர்மானததை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர். (க-8)

# 100 மீற்றர் திட்டத்தின் முதற்கட்டம் பூர்த்தி

கடற்கரையிலிருந்து 100மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக குறிக்கும் நடவடிக்கைகளின் முதற் கட்டம் பூர்த்தியடைந்து வருவதாக நில அளவையாளர் பி. சி.மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கையை அடுத்தமாத இறுதிக்குள் நிறைவுசெய்துகொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கடற்கரையிலிருந்து 100மீற்றர் பிரசேத்தை பாதுகாப்பு வலயமாக குறிக்கும்பணி கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமானது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட 700கிலோ மீற்றர் கரையோரப்பிரதேசத்தில் இதுவரை 542 கிலோ மீற்றர் பகுதியில் 100 மீற்றர் எல்லையை குறிக்கும் முதற்கட்ட நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளது.

பாதுகாப்பு வலயத்தை அடையாளப்படுத்தும் பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படுவதுடன் முதற்கட்டத்தில் எல்லைகளை குறிக்கும் பணிகள் இடம் பெறுகின்றன.

இரண்டாம் கட்டமாக கொங்கிறீட் தூண்கள் நடப்படும், மூன்றாம் கட்டமாக அளக்கும் பணிகள் நிறைவடைந்த பிரதேசங்களுக்கான வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, விடுவிக்கப்படாத பிரதேசங்களின் கரையோரப்பகுதிகளில் பாதுகாப்பு எல்லைகளை அடையாளப்படுத்தும் பணிகளில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# அனர்த்த நிவாரண முகாமைத்துவப்பணிகளை சமாதானத்திலிருந்து தனிமைப்படுத்த முடியாது

## சுவீடன் அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண முகாமைத்துவத்தை இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் இருந்தும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்தும் தனிமைப்படுத்த முடியாது என்று சுவீடன் அபிவிருத்தி அமைச்சர் ஹரின் ஜமீட்டின் தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகளை சுவீடன் வெளியுறவு அமைச்சில் அபிவிருத்தி அமைச்சர் பேச்சுக்களை நடத்தியபோது இக்கருத்துக்களை அவர் தெரிவத்தார்.

எந்தவொரு அனர்த்த முகாமைத்துவத்திற்கும் அமைதியான சூழ்நிலை இருக்க வேண்டும். குறிப்பாக இலங்கையைப் பொறுத்தவரையில் இது முக்கியமானது.

ஆழிப் பேரலையின் பின்னரான அனர்த்த முகாமைத்துவத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் இருதரப்பும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து தற்போது முக்கியமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்ட வேளையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையும சமாதான முன்னெடுப்புக்களும் வலுவிழந்த் நிலையில காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது சுவீடன் அபிவிருத்தி அமைச்சரிடம் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாம்களில் நலிவடைந்த நிலையில் இருப்பதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சந்திப்பிற்கு முன்னர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான கூட்டுறவு நிறுவனத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள் கட்டமைப்பு புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர். (ப)

## "அவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கிறார்"



**1931ஆம் ஆண்டு, வினோபாஜிக்கு மகாத்மா காந்தியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப்பிரித்து படிக்க ஆரம்பித்தார். வினோபாஜி படிக்கும்போதே அவர் முகம் மாறியது. படித்து முடிந்தவுடன் கடிதத்தை கிழித்துக் குப்பைத் தொட்டியல் போட்டார். பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டு இருந்தவருக்கு ஆச்சரியம். காந்திடம் இருந்து கடிதம் வந்தால் ஒவ்வொருவரும் அதைப் பத்திரமாகப் பாதுகாப்பார்கள். இவர் ஏன் கிழித்துப் போட்டார்? என்ற கேள்வி. குப்பகைக் கூடையில் இருந்த கடிதத்தை எடுத்து ஒன்று சோத்து படித்துப் பார்த்தார்.**

### தவக்காலச் சிந்தனை

**அதில் காந்திஜி "தங்களைப்போன்ற பெரிய மகானை நான் இதுவரையில் சந்தித்தில்லை' என்று எழுதியிருந்தார். "என்னங்க இது, பத்திரப்படுத் வேண்டியதைக் கிழித்துவிட்டாரே" என்று அவர் கேட்டார். அதற்கு வினோபா, "பெரியவர் நம்மேல் வைத்திருக்கும் அன்பு காராணமாக சில தவறுகள் செய்யலாம். அந்தத் தவறுகளுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது" என்றார். மனிதர் தரும் பெருமையத் தேடாத அன்பர்.**

**காவலன்**

# கொழும்பு நீதிமன்றில் முடங்கி கிடக்கும் செம்மணி வழக்கு!

சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்திய செம்மணி புதைகுழி விவகாரம் மற்றும் மன்னார் கமலிற்றா மீதான குழு பாலியல் வல்லுறவின் பின்னரான கொலைச சம்பவம் ஆகியவை தொடர்பான வழக்குகளில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுகிழமை 13 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் பூர்த்தியடைந்தன.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் இருந்து கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ள இந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் எதுவித முன்னேற்றமும் இதுவரை காணப்படவில்லை என இந்த வழக்குகளில் பாதிக்கப்பட்ட தரப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கைத் தனிப்பட்ட காரணங்களுக்காக யாழ். நீதிபதிகள் விசாரணை செய்வதற்கு மறுப்பு தெரிவித்ததையடுத்து, அப்போது மன்னார் மாவட்ட நீதிபதியாக இருந்தவரும், தற்போது வவுனியா மாவட்ட நீதிபதியாகக் கடமையாறறி வருபவருமாகிய எம்.இளஞ்செழியன் 1999 ஆம் ஆண்டு ஜூன மாதம் 15 ஆம் திகதி மேலதிக யாழ். மாவட்ட நீதிபதியாக விசேடமாக நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

ஒன்பது மாத காலத்தில் செம்மணி புதைகுழி சர்வதேச தடயவியல் நிபுணர்களின் முன்னிலையில் தோண்டப்பட்டு மரண விசாரணைகள் நடைபெற்றதுடன், அப்போது கைப்பற்றப்பட்ட தடயங்கள் அடையாளத்திற்கு வைக்கப்பட்டன.

இந்த விசாரணையில் திருப்புமுனையாக சந்தேகத்திற்குரிய 6 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு இந்த விசாரணையை நடத்திய, விசேட நீதிமன்ற அமர்வின் போது ஆஜர் செய்யப்பட்டனர். இந்த சந்தேக நபர்களை வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் இந்த வழக்கை தொடர் விசாரணைகளுக்காக யாழ். மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தி தமக்கு வழங்கப்பட்ட விசேட கடமையை நிறைவு செய்தார்.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக இந்த வழக்கு அழைக்கப்பட்டபோது, எதிரிகளுக்கு சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை. இதனையடுத்து கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் எதிரிகள் மனு செய்ததையடுத்து, அவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டது.

சில காலத்தின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எதிரிகள் பிணை விண்ணப்பம் செய்ததையடுத்து, இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் சான்றுகளை உறுதிப்படுத்துவதற்கும், கொல்லப்பட்டார்கள் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளவர்களை அடையாளம் காண்பதற்குமாக மரபணு பரிசோதனைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் மன்னாரில் கமாலிற்றா என்ற இளம் பெண் படையினரால் குழு பாலியல வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கொல்லப்பட்டார். இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுகின்ற 5 பேரில் இருவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இந்த வழக்கும் கொழும்பிற்கு மாற்றப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

# தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றன

## விவாத அரங்கு -7

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாத அரங்கிற்கு, சீர்படுத்துகின்றன எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் சுன்னாகம் ச.சிவரூபன் மற்றும் தெல்லிப்பழை செல்வி பா.சுபாஜினி ஆகியோர்.**

**ச.சிவரூபன்**
**சுன்னாகம்**

ஆரம்ப காலத்தில் குருகுல கல்விமுறையே காணப்பட்டது. பாடசாலைகளோ, தனியார் கல்வி நிறுவனங்களோ காணப் படவில்லை.

ஆங்கிலேயரின் பின்னர் பாடசாலைக் கல்வி முறை தோற்றம் பெற்றது. முதலில் அரசாங்கப் பாடசாலைகளும் பின்னர் தனியார் பாடசாலைகள் அரசின் அனுமதியுடனும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவால் இலவச கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அக்காலத்தில் பாடசாலை ஆசிரியர்கள் கடமை உணர்வோடும், விருப்பத்தோடும் மாணவர்களுக்கு கல்வியைப் போதித்தனர். எனினும் ஓரிரு பல்கலைக் கழகங்களே காணப்பட்டதால் ஒரு சிலசிலரே பல்கலைக்கழக படிப்பை மேற்கொள்ள முடிந்தது.

சில தசாப்தங்களுக்கு முன் பாடசாலைகளில் கல்வித்தரம் குன்றத் தொடங்கியதால், மாணவர்கள் ஆசிரியர்களின் வீடுகளுக்கு சென்று பிரத்தியேக வகுப்புக்களை மேற்கொண்டு, கல்வி கற்க ஆரம்பித்தனர். இதற்கு இன்னொரு காரணம் பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டும் என்ற முனைப்பு மாணவர்களிடம் ஏற்பட்டமை ஆகும். பின்னர் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி திட்டம் ஆரம்பமானது. 180 புள்ளிகள் எடுத்து பலர் பல்கலைக் கழகத்திற்குத் தகுதி பெற்றாலும் அனைவருக்கும் பல்கலைக்கழக படிப்பை மேற்கொள்ள பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை. தரப்படுத்தல் பல்கலைக்கழகத் தெரிவு முறைக்கு அறிமுகப்படுத்தப்படடது. இதில் திறமைக்கு குறிப்பட்டளவு வீதமும் மாவட்ட சனத்தொகை அடிப்படையில் பின்தங்கிய மாவட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட வீதமும் என ஒதுக்கப்பட்டதனால் பலர் திறமையிருந்தும் பல்கலைக்கழக படிப்பைத் தொடர முடியாதிருந்தது. இந்நிலையில் கல்வியில் போட்டி மனப்பான்மை அதிகரித்தது. விளைவு தனியார் கல்வி நிறுவனங்கள் பெருமளவில் உருவெடுத்தன.

பாடசாலையில் ஆசிரியர் நியமனத்தின் போது கல்வி கற்பித்தல் திறமையுள்ள ஆசிரியரைத் தெரிவு செய்யாது அவரது கல்வித் தகமையையும் பின்னர் போட்டிப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டமையும் ஆகும். இதனால் வகுப்பிலுள்ள எல்லா மாணவருக்கும் விளங்கக் கூடியதாக கல்வி கற்பக்கும் ஆற்றல் எல்லா ஆசிரியருக்கும் இருக்கவில்லை. ஒரு சிலரே அவ்வாறு இருந்தனர்.

அப்படியான திறமையுள்ள ஆசிரியர்களை பிரபல பாடசாலைகள் மற்றும் அதிபர் தமது செல்வாக்கு மூலம் சில பாடசாலைகளுக்கு மட்டும் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இன்றும் இதே நிலைதான். இதனால் சில பாடசாலைகளில் மட்டும் தரமான ஆசிரியர்கள் காணப்பட்டனர். பலவற்றில் கற்பிக்கும் ஆற்றல் குறைந்த ஆசிரியர்களே காணப்பட்டனர், காணப்படுகின்றனர்.

இதனால் மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை கல்விபபொதுத்தராதர சாதாரண தரம், உயர்தரம் என்பவற்றில் நல்ல பேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்வதற்காக நாடிநின்றனர் எனலாம். எனவே எல்லா பாடசாலைகளிலும் பட்டதாரி, பயிற்றப்பட்ட, தொண்டர் ஆசிரியர் எனப் பல்வேறு வகையினர் காணப்பட்டனர். ஆனால் கற்பிக்கும் திறமை சிலருக்கே காணப்பட்டது.

ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் எல்லாப்பாட ஆசிரியர்களும, திறமை அடிப்படையிலும் சிறப்பு தேர்ச்சி அடிப்படையிலும், மாணவர்களுக்குத் திறமையான பரீட்சை முடிவுகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களே தெரிவு செய்யப்பட்டு கல்வி கற்பிக்கின்றனர். ஆனால் பாடசாலைகளில் எல்லாவற்றிலும் எல்லாப்பாடத்திற்கும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. அத்துடன் அவர்கள் ஒரு சில பாடசாலைகளில் மட்டும் குவிந்து காணப்பட்டனர். பயிற்றப்பட்ட ஆசிரியர் கூட சிறப்பாக எல்லா மாணவர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் கல்வி கற்பிப்பாரா என்று சந்தேகம் தான்.

அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் தமக்குத் தேவையான பாடத்தை மட்டும் அல்லது சில பாடங்களை மட்டும் கற்கும் வசதியும் காணப்படுகின்றது. இது ஆசிரியான் தரத்தைப் பொறுத்து ஒரு மாணவன் பல தனியார் கல்வி நிறுவனங்களில் தேவையான பாடத்தை கற்கும் வசதியும் காணப்படுகிறது. இது பாடசாலைகளில் கிடையாது.

மாணவனது தேவை இறுதிப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறு பெறுவதும் பல்கலைக் கழகம் செல்வதும் தான். ஏனெனில் பல்கலைக்கழகம் செல்லாதோருக்கு வேறு தொழில் நுட்ப கல்வித் திட்டங்கள் இலங்கையில் மிகவும் குறைவு. அதுவும் யாழ்ப்பாணத்தில் இப்போது தான் சில நிறுவனங்கள் தோன்றுகின்றன. தற்போது வெளிவாரிக் கற்கை நெறி பல்கலைக்கழகத்தில் காணப்பட்டாலும் உள்வாரி மர்ணவர்களுக்கு உள்ள சிறப்புப்பட்டம், வகுப்பு வழங்கும் பட்டம், எல்லா பாடநெறிக்கும் வெளிவாரி இன்மை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

இதனால் மாணவர்கள் எல்லோரினதும் குறிக்கோள் ஒரு உள்வாரி பல்கலைக்கழக மாணவன் ஆவது தான். இதனால் தான் மாணவர்கள் அனுபவமும், சிறப்புத் தேர்ச்சியும், கல்வித் தராதரம் கூடிய ஆசிரியர்கள் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களுக்கு படையெடுக்கிறார்கள். தற்போது வெளிநாடுகளுக்கு அடிப்படை கல்வித்தகுதியுடன் மாணவர்களைத் தெரிவு செய்தாலும் பணமும் அல்லவா வேண்டும். எனவேதான் மாணவர்கள் இலவச கல்விகற்கும் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு செல்ல படாதபாடுபடுகிறார்கள். தற்போது "Z" புள்ளியும் வேறு வதைக்கிறது.

பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பத்தில் செயற்பட்டாலும் தற்போது அது கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. அத்துடன் ஒழுக்கத்தை எடுத்துக் கொண்டால் ஒரு சிலர் கெட்டுப்போனாலும் கூடுதலாக மாணவர்கள் கல்வியே கண்ணாக இருப்பதாலும் பொழுது போக்க நேரம் இல்லாது கல்விக்காக செலவிடும் நேரம் கூடுதலாக இருப்பதாலும் தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலையில் காணப்படும். கல்விக் குறைபாட்டை சீர்ப்படுத்துகின்றன எனலாம்.

இங்கு சிறந்த கல்வித்தரமும், அனுபவமும், சிறப்புத் தேர்சசியும், விசுவாசமும் உள்ள ஆசிரியர்களை மட்டும் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் தெரிவு செய்யும் வரை தனியார் கல்வி நிறுவனங்கள் இருக்கத்தான் செய்யும். எனவே தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் பல்கலைககழகம் செல்லும் வழியை காட்டும் விதத்தில் கல்வியை சீர்ப்படுத்துகின்றன என்பதே எனது வாதமாகும்.

---

"தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீர்படுத்துகின்றன'' என்பதே எனது வாதமாகும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை மேன்மைப்படுத்துவதும் கல்வி கற்க ஊக்கப்படுத்துவதும் கண்கூடு. அவை மாணவர்களை கல்வியில் சீர்படுத்துகின்றன என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு மாணவர்களினதும் வாழ்க்கையில் கல்வியே முக்கிய கருவாகும். "கல்வியே பெருந்தனம்'' என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு தாய் பத்து மாதம் சுமந்து. பெற்ற குழந்தையை பாலூட்டி, சீராட்டி வளர்க்கின்றாள். வளர்ந்து வரும் குழந்தை தனது வாழ்க்கையில் முனனேறி, நற்பிரஜையாக வாழ கல்வி கற்க வேண்டும் என்று நினைத்து, பாடசாலையில் சேர்க்கின்றாள். பாடசாலையில் சேர்ந்த பிள்ளை ஆசிரியனின் கீழ் இருந்து கல்வி பயின்று வரும் போது, மேலும், மேலும் பல விடயத்தை ஆராய முற்படு

**வாதம் -2**

கின்றான்.

அதனால் தான் தனியார் கல்வி நிறுவனத்திற்கு செல்கின்றான். தனியார் கல்வி நிறுவனததில் உள்ள ஆசிரியர்கள் பாடங்களை நல்ல முறையில் போதனை செய்கின்றார்கள். மாணவன் பாடசாலையில் விளங்காத பாடங்களைத் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றுக் கொள்கின்றான்.

இந்த கலியுக காலத்தில் எந்தவொரு மாணவனும் பாடசாலை படிப்பை முடித்தவுடன் தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஓடுகின்றான். ஏனெனில் அங்கு படிக்கும் பாடம் மிகவும் நம்பிக்கை தரக் கூடியதாக இருப்பதனால் தான் சகல மாணவர்களும் தனியார் கல்வி நிறுவனப்படிப்பையே அதிகம் விரும்புவதுண்டு. ஏன் தெரியுமா? அங்கே நல்ல விளக்கமாக ஆசிரியர்கள்

**செல்வி பா.சுபாஜினி**
**தெல்லிப்பழை**

கற்றுக கொடுப்பதுடன் சந்தேகங்களையும் தெளிவு படுத்துகின்றார்கள்.

எனவே நாம் தனியார் கல்வி நிறுவனத்தால் மாணவர்கள் சீரழிக்கப்படுகின்றார்கள் என்று கூறமுடியாது. அது மிகவும் தவறானது. படிக்க விரும்பும் மாணவன் கட்டாயம் படிப்பில் கவனமாக இருப்பான். உதாரணமாக பாடசாலையில் பரீட்சை என்றால் மாணவன் என்ன செய்கின்றான தெரியுமா? உடனே தனியார் நிறுவனத்தில் கற்பித்த கொப்பியை தூக்கிப் படிக்கின்றான் அந்த நம்பிக்கையுடன் பரீட்சை செய்யத் தயராகின்றான்.

தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் முறை அவர்களை ஊக்கப்படுத்துகின்றது. அதனால் மாணவன் அதனை விரும்பி நாடுகின்றான். அதற்காக பாடசாலை கல்வியை குறை கூற முடியாது. அங்கு கற்று விளங்காதவற்றை தான் தனியார் கல்வி நிறுவனத்தில் பெறுகின்றார்கள். தனியார் கல்வி ஆசிரியர்கள் கல்வியை வழங்க ஆர்வம் காட்டி வருவதுண்டு. விளங்காதவற்றை ஏனோ, தானோ என்று தட்டிக்கழிக்க மாட்டார்கள். அதனால் மாணவர்களும் ஆர்வமாக கல்வி கற்கிறார்கள். எனவே தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீர்படுத்துகின்றன என்பதே எனது வாதமாகும். □

---

# வெலிகந்தவில் சுடப்பட்ட இருவரும் புலி ஆதரவாளர்கள் என்கிறது பொலிஸ்

(வாழைச்சேனை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள ஹரபொல கிராமத்தில் கடந்த திங்கள் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக கொல்லப்பட்ட இளைஞர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

வேல்நாயகம் செல்வநாதன் (வயது 22), சுப்பிரமணியம் குணசேகரம் (வயது 21) ஆகிய இரண்டு இளைஞர்களும் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களாலேயே சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின போது சுப்பிரமணியம் குணசேகரம் என்பவரின் வீட்டிற்குச் சென்ற இராணுவ சீருடை தரித்த நான்கு ஆயுதபாணிகள்' நீங்கள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பதால் மாஸ்டர உங்களை அழைத்து வரும்படி கூறியுள்ளார்.' என தெரிவித்து அவரை அழைத்துச் சென்ற சமயம் அங்கு நின்ற அவரது நண்பரான வேல்நாயகம் செல்வநாதனையும் அழைத்துச சென்றுள்ளார்கள்.

அந்த நேரத்தில் தங்களை அடையாளம் காட்டாதவாறு கறுப்புத்துணியினால் முகத்தை மறைத்திருந்த ஆயுதபாணிகள் இருவர் வீட்டிற்குள சென்று அவரது கையடக்கத தொலைபேசியையும் எடுத்துள்ளார்கள்.

இந்த ஆயுதபாணிகளில் ஒருவர் ரி-56 ரக துப்பாக்கியுடன் காணபபட்டார். ஹரபொல சந்தியில் சடலமாக மீட்கப்பட்ட இவர்களின் உடல்களில் சரமாரியான துப்பாககிச் சூடுகள் காணப்பட்டுளளன. சுப்பிரமணியம் குணசேகரம் என்பவர் கைகள் இரண்டும் இடுப்புப்பட்டியால் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

(ப)

# இஸ்ரேலிடம் இருந்து அரசு ஏவுகணைகளை பெற முயற்சி!

(கொழும்பு)

இலங்கை இராணுவப் படைகளுக்குத் தேவையான ஒரு தொகை ஏவுகணைகளை இஸ்ரேலிடம் இருந்து பெறுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக இஸ்ரேல் சென்றுள்ள இலங்கையின் இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட தலைமையிலான உயர் மட்ட குழுவினர் இஸ்ரேலுடன் இது குறித்து ஆராய்ந்து இருப்பதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் எனப் பலராலும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இலங்கையில் விசேட அதிரடிப்படைக்குத் தனியான புலனாய்வுத்துறை ஒன்றைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை பாதுகாப்புத் தரப்பு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு முதல் கட்டப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

(க-9)

# மணிலா சிறையில் பொலிஸார் சுட்டதில் கைதிகள் 22 பேர் பலி

மணிலா சிறையில் பொலிஸார் சரமாரியாகச் சுட்டதில் கைதிகள் 22 பேர் பலியானார்கள். மற்றும் பலர் காயமடைந்தனர்.

கிழக்காசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரில் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்புடைய சிறைச்சாலையில் முஸ்லிம் தவிரவாதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர்.

சிறையில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிகளைப் பொலிஸார் பழுது பார்த்துக்கொண்டிருந்தபோது சிறையில் அடைக்கப்பட்டிருந்த முஸ்லிம் தீவிரவாதக் கைதிகள் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க முயன்றனர். உடனே பொலிஸார் அவர்களை எச்சரித்து ஆயுதங்களைத் திருப்பிக்கொடுக்கும்படி கேட்டனர். கைதிகள் மறுக்கவே மோதல் போக்கு உருவானது. இதனையொட்டி பொலிஸார் சரமாரியாகச் சுட்டதில் கைதிகள் 22 பேர் பலியானார்கள். துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களில் அல்கெய்டா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய அபு சாயாபு பிரிவுத் தலைவர்கள் 4 பேர் அடங்குவர் என்று உள்துறை செயலாளர் ஏஞ்சலோ ரேயெங்கு தெரிவித்தார். (து)

## கொசோவோ அதிபரை கொல்ல முயற்சி


(பிரிஸ்டினா)

வெடிகுண்டு மூலம் படுகொலை செய்ய நடந்த முயற்சியில் கொசோவோ அதிபர் இப்ராகிம் ருகோவா அதிஷ்ட வசமாக உயிர்தப்பினார்.

பிரிஸ்டினாவுக்கு வந்திருந்த ஐரோப்பிய யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை பிரிவுத் தலைவர் சேவியா சோலானாவைச் சந்தித்துப் பேசுவதற்காக அதிபர் இப்ராகிம் ருகோவா காரில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று குண்டுவெடித்தது. இதில ருகோவா காயமின்றி உயிர்தப்பினார். ஆனால் அவரது பாதுகாவலர் காயமடைந்தார். பாதுகாவலர் வந்த காரும் சேதமடைந்தது என்று பொலிஸ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு ருகோவா வீட்டிலிருந்து காரில் சென்றுகொண்டிருந்தபோது குண்டுவீசி அவரைப் படுகொலைசெய்ய முயற்சி நடந்தது. அதில் அவர் உயிர்தப்பினார்.

தறபோது 2ஆவது முறையாக குண்டு வெடித்து படுகொலைசெய்ய நடந்த முயற்சியிலும் உயிர்தபினார். (து)



ஜேர்மனி கனோவரில் நடைபெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சியையே இங்கு காண்கிறீர்கள். இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியும் அதன் அருகே நிறுத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகளும் 24 கரட் தங்கத்தில் செய்யப்பட்டவை. தென் கொரியாவில் உள்ள எல்.ஜி.எலக்ரோனிக் நிறுவனத்தின் தயாரிப்பு இதுவாகும்.



இந்தியா வந்துள்ள சவுதி அரேபிய இளவரசர் அப்துல் அஜிஸ் டில்லியில் ஜனாதிபதி கலாமை சந்தித்துப் பேசினார்.

## கங்கை நதியில் நீர் வற்றிப்போகும் அபாயம் சுற்றுச்சூழல் அமைப்பின் கடும் எச்சரிக்கை

இந்தியாவின் ஜீவநதிகளில் ஒன்றான கங்கையின் நீர் ஆதாரமான கங்கோத்ரி பனியாறின் நீளம் ஆண்டுதோறும் 23 மீற்றர் குறைந்துவருகிறது. இதனால் கங்கை நதி வற்றிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஜெனீவாவில் இயங்கிவரும் வர்ல்ட் வைட் பண்ட் பார் நேச்சர் எனும் சுற்றுச்சூழல் அமைப்பு தனது ஆய்வறிக்கையில் கூறியுள்ளது.

சுற்றுப்புறச் சூழல் மாசடைவதால பூமியின் வெப்பம் அதிகரித்துவருகிறது. இதனால் இமயமலையிலுள்ள பல பனியாறுகள் வேகமாக உருகி அளவில் குறைந்துவருகின்றன. இதனால் வட இந்தியா, தென் சீனா, நேபாளம் ஆகிய பகுதிகளில் தொடர்ந்து சில ஆண்டுகள் கடும்வெள்ளம் ஏற்படக் கூடும். அதன்பின் இமயமலையில் தோன்றும் நதிகள் வற்றத் தொடங்கிவிடும. அதனால் கடுமையான நீர்த்தட்டுப்பாடு ஏற்படும். இமயமலையில் இருக்கும் பனியாறுகள் ஆசியாவின் ஜீவநதிகளான கங்கை, சிந்து, பிரம்மபுத்ரா, மெகாங், தான்லவின், யாங்ட்ச, மஞ்சள் ஆறு ஆகியவற்றுக்கு நீர் ஆதாரங்களாக உள்ளன.

வடஇந்தியாவிலும் தென் சீனாவிலும் ஆண்டுமுழுவதும் நர் கிடைப்பதற்கு இந்த ஆறுகளே காரணம். இந்த ஆறுகள் வற்றினால் வட இந்தியாவிலும், தென் சீனாவிலும், நேபாளததிலும் பொருளாதார சுற்றுச் சூழல பிரச்சினைகள் ஏற்படும். நீரமின் திட்டங்கள் பாதிக்கப்பட்டு மின்சக்தித் தட்டுப்பாடு ஏற்படும். தொழிற்துறை பாதிக்கப்படும். பாசனத்துக்கு நீர் இல்லாமல் விவசாய உற்பத்தி குறைநது விடும் என்ற ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (து)

## நேபாளத்துக்கு ஆயுத உதவி தயார் நிலையில் பாக்.அரசு

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகளைச் சமாளிக்க அந்நாட்டிற்குத் தேவையான ஆயுதங்களையும், உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

நேபாளத்தில் ஷெர் பகதூர் தூபா தலைமையிலான அரசை டிஸ்மிஸ் செய்த மன்னர் ஞானேந்திரா அவசர நிலைமைப் பிரகடனம் செய்தார். இதனால் கொதிப்படைந்த மாவோத் தீவிரவாதிகள் நாட்டில் பொருளாதாரத தடை விதித்ததோடு, கலவரங்களிலும், வன்முறைகளிலும் ஈடுபட்டனர். இச்சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டனர்.

நாட்டில் அமைதி திரும்பச் சர்வதேச நாடுகள உதவவேண்டும் என மன்னர் ஞானேந்தரா கோரிக்கை விடுத்தார். நேபாளத்திற்கு, இந்தியப் படைகளை அனுப்பும் எண்ணமில்லை என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதேசமயம் அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மை உருவாகத் துணை நிற்போம என்றும் கூறியுள்ளது. ஆனால் பாகிஸ்தான் அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது.

நேபாளத்தில் மாவோத் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பாக். துணை நிற்கும். மன்னர் ஞானேந்திரா கேட்டுக்கொண்டால் அந்நாட்டிற்கு ஆயுதங்களையும், மாவோக்களைச் சமாளிக்கத் தேவையான திட்டங்களை வகுக்க நிபுணர்கள் குழுவையும் அனுப்பிவைக்கத் தயாராக இருக்கிறோம் என நேபாளத்துக்கான முன்னாள் தூதர் ஜபீர அக்ரம் தெரிவித்துள்ளார். (து)

## இந்திய -பாக். உறவு மேம்பட அமெரிக்கா தீவிர ஆர்வம்

(வோஷிங்டன்)

இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை தொடர அமெரிக்கா தொடர்ந்து ஊக்கமளிக்கும் என வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிபரின் வெள்ளைமாளிகை செய்தித் தொடர்பாளர் ஸ்காட மெக்கல்லன், இந்தியா- பாக். எல்லைப் பகுதியில் பதட்டத்தைத் தணிக்கும் வகையில் அந்நாடுகள் அமைதிப பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. இப்பேச்சுவார்த்தையில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையை ஊக்கப்படுத்தும் செயல்களில் அமெரிக்கா தொடர்ந்தும் ஈடுபடும்.

இதன் தொடக்கமாக வெளியுறவு அமைச்சர் தெற்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளில் ஒருவார காலம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பின்போது ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் பாக். நாடுகளின் அரசியல் நிலவரம், இருநாட்டு இராணுவப் படைகளும் இணைந்து கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வது உடபட பல்வேறு முக்கியவிஷயங்கள் குறித்து விவாதிப்பார். இதன் மூலம் இந்திய - அமெரிகக உறவு மேலும் வலுவடையும் எனத் தெரிவித்துள்ளார். (து)

## 3 வயது சிறுவனின் அற்புத நினைவாற்றல்

(சிதம்பரம்)

60 நாடுகளின் தேசியக் கொடிகளை வைத்து அந்த நாடுகளின் பெயர்களை உடனடியாகத் தெரிவிககிறான் 3 வயது சிறுவன் குருவிஷ்ணு. அதுமட்டுமல்லாமல் தேசியத் தலைவர்களின் பெயர்களையும் கூறுகிறான்.

ஆசிரியராகப் பணியாற்றும் சிதம்பரம் சுலோச்சனா நகரைச் சேர்ந்த கேமதிவாணன் இவரது மனைவி பெயர் தரணி ஆகிய இவர்களது 3வயது மகன் குருவிஷ்ணு ஞாபக சக்தியில் அபூர்வ ஆற்றலைப் பெற்றுள்ளான். சிறுவன் குருவிஷ்ணுவிடம் 60 நாடுகளின் தேசிய கொடிகளைக் காட்டினால் அந்த நாட்டின் பெயரையும், தலைநகரத்தின் பெயரையும் உடனே தெரிவிக்கின்றான்.

அதுமட்டுமலலாமல் தேசியத்தலைவர்கள் பெயரையும் கூறுகிறான். அத்துடன் அறிவியல் மற்றும் தமிழில் பொது அறிவு குறித்த 60க்கு மேற்பட்ட கேள்விகளுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய சுமார் 25 கேள்விகளுக்கும் உடனடியாகப் பதிலளிக்கிறான்.

இந்தியாவில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை வரிசைப்படுத்தி அழகாகக் கூறுகிறான். (து)



தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற சர்வதேச கோடைகால ஆடை அணிவகுப்பு நிகழ்ச்சியில் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்த ஆடையில் அழகிய மங்கை. இந்த நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி - குறள்

வலம்புரி

# மருத்துவபீட மாணவர்கள் முன்னுதாரணமாக நடக்கவேண்டும்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் தடைப்பட்டுப்போயுள்ள சத்திர சிகிச்சை கற்கைநெறியை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரி போராட்டம் நடத்துகின்றனர்.

தமக்கான கற்றைநெறி ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற மாணவர்களின் கோரிக்கை நியாயமானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும்.

எனினும் துணைவேந்தரை அவரது அலுவலகத்திற்குச் செல்லவிடாது தடுப்பதென்ற மருத்துவபீட மாணவர்களின் முடிபு ஒரு பண்பாடான செயலாகத் தெரியவில்லை.

துணைவேந்தர் தனது கடமையைச் செய்வதைத் தடுப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மருத்துவபீடம் என்பது யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கம். மருத்துவபீடமே யாழ். பல்கலைக்கழகமாகாது.

ஆனால், துணைவேந்தர் மருத்துவபீடத்திற்கு மட்டுமன்றி பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களுக்கும் துணைவேந்தராக இருப்பவர். எனவே அவர் தனது பணியைச் செய்வதன் மூலமே ஏனைய பீடங்கள் செயற்படமுடியும்.

மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கைநெறி தடைப்பட்டுப் போயுள்ளதென்பதற்காக ஏனைய பீடங்களைச் செயலிழக்கச்செய்வதென்பது நியாயத்தின்பாற்பட்டதல்ல.

சத்திரசிகிச்சைக் கற்கைநெறி தடைப்பட்டமைக்காக ஏனைய பீடங்களும் தடைப்படவேண்டும் என மருத்துவபீட மாணவர்கள் கருதுவார்களே ஆனால், அது அவர்களின் கோரிக்கையின் நியாயப்பாட்டை சின்னாபின்னமாக்கிவிடும்.

மருத்துவபீட மாணவர்களின் கோரிக்கை நியாயமானதென்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்களின் இந்த அங்கீகாரத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு துணைவேந்தரை அவரது அலுவலகத்திற்குச் செல்லவிடாது தடுப்பதுபோன்ற போராட்ட வழுக்களை தவிர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

துணைவேந்தர் தனது பணிநிலைக் கடமைகளைச் செய்வதற்கு எந்தத் தடையும் இருக்கக் கூடாது.

அதேநேரம் மாணவர்களின் போராட்டம் மருத்துவபீட பீடாதிபதி மற்றும் பேராசிரியர்களை மனங்கோண வைப்பதாக இருப்பது எதிர்மறையான விளைவுகளையே தரும்.

குறிப்பாக மாணவர்கள் நடந்துகொண்ட விதம் கண்டு கவலையுற்ற மருத்துவபீடாதிபதி தனது பதவியை இராஜிநாமா செய்யமுற்பட்டுள்ளார்.

மாணவர்கள் போராட்டங்கள் விழுமியங்களை மீறி நடந்துகொள்கின்ற வேளையில் அந்த மாணவர்களின் கற்றைநெறிக்கு பொறுப்பாக இருக்கின்ற பீடாதிபதி ஒருவர் செய்யக்கூடிய கௌரவமான நடவடிக்கை பதவியைச் இராஜிநாமா செய்வதாகவே இருக்கும்.

ஆனால், மருத்துவ விரிவுரையாளர்கள் இந்த மண்ணைவிட்டு வெளியேறிய காலத்திலும் இங்கு பணியாற்றிய மருத்துவ பீடாதிபதி ஒருவர் மாணவர்களின் போராட்ட நடவடிக்கையினால் பதவியைச் இராஜிநாமா செய்துகொண்டுள்ளார் என்ற செய்தி பொதுமக்களைச் சென்றடைகின்றபோது அது மருத்துவபீட மாணவர்களின் "செய்நன்றி அறிதல்" பற்றி தவறான முடிபை எடுக்கவைக்கும்.

ஆக, மனித சமூகத்தின் முன்னோடியாக திகழக்கூடிய மருத்துவபீட மாணவர்கள் மற்றவர்கள் மெச்சக்கூடிய வகையில் முன்னுதாரணமாக நடந்துகொள்ளவேண்டும்.

## தமிழ்ச்செல்வன் குழு ஐரோப்பா சென்றுள்ளதால்

# சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பை நிறுவுவதில் தாமதம் என்கிறார் தனபால

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஏற்படும் தாமதமே. வடக்கு கிழக்கில் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளாமைக்குக் காரணம் என அரசாங்கத்தின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகள் வழங்குவதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஒரு பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே அதனை வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

இந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது குறித்து அரசின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வெளிநாடுசென்றுள்ளதால் அதற்கான பதிலில் தாமதம் ஏற்படுவதாகவும் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.



நாங்கள்தான் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் வெகுஆர்வமாக உள்ளோம். எமது நிலைப்பாடு விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவர்களின் பொதுக் கட்டமைப்பின் நிலைபபாடோ அல்லது பொதுக கட்டமையபின் வடிவம் பற்றியோ எமக்குத் தெரியாது.

இருந்தும் நாங்கள், எமது தீவிரமான செயற்பாட்டை எந்த விதத்திலும் குறைத்துக்கொள்ளத் தயாரில்லை. எனவே, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நாடு திரும்பியதும் இது பற்றிப் பேச்சினை ஆரம்பிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## மட்டக்களப்பு ஆரையம்பதியில்

# சுனாமி அனர்த்த நிவாரணப் பதுக்கல் அறிக்கை தருமாறு அரச அதிபருக்கு பணிப்பு

(மட்டக்களப்பு)

ஆரையம்பதி பகுதியில் சுனாமி நிவாரண பொருட்கள் மக்களினால் தோண்டி எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபரை கோரியுள்ளதாக பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் பி.கெட்டியாராச்சி தெரிவித்தார்.

நிவாரணப்பொருட்கள் தோண்டி எடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அறிக்கை கிடைத்தவுடனே இது தொடர்பான மேலதிக கருத்தை வெளியிடமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணங்களை அரச அதிகாரிகள் மோசடி செய்ததாகக் கூறிக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரயம்பதி மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகம் முன்பாக தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் பிரதேச செயலக வளவினுள் புதைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் தம்மால் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-8)

# சுனாமி நிவாரணம் சகலருக்கும் உரிய முறையில் கிடைக்க நடவடிக்கை

## எடுத்துள்ளதாக சமூக நலன்புரி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி நிவாரணம் பாதிப்புற்ற சகல மக்களுக்கும் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? என்பதை கண்டறிய மூன்று பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆய்வுகளை நடத்தும் என கழக நலன்புரி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சுனாமி நிவாரண விநியோகம் தொடர்பாக உண்மை நிலை கண்டறிவதற்கே இந்தக் குழுவை அமைச்சு நியமித்துள்ளது.

ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் தகவல்கள் மக்கள் செய்யும் முறைப்பாடுகள் என்பவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதே ஆய்வுக்குழுவின் கடமையாகும்.

காலாவதியான உணவுப்பொருட்களின் விநியோகம், உணவு வகைகள வீண் விரயமாதல் என்பவற்றை தடுக்கும் நடவடிககைகளிலும் ஆய்வுக்குழு ஈடுபடும். மற்றும் நிவாரண மோசடிகள இடம்பெறுவது நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக அவர்களின் தகுதிகளை பாராமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சுத் தெரிவித்துள்ளது. (க-8)

# அனர்த்த முகாமைத்துவம் பற்றி ஆராய ஜப்பானிய நிபுணர் குழு இலங்கை வரும்

## இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் தகவல்

(கொழும்பு)

ஜப்பானில் 12 அமைச்சுக்களை சேர்ந்த 32 நிபுணர்கள் அடங்கிய குழு இந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மளகட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதுடன் மேலதிக ஆலோசனைகளை வழங்குவதற்கும் சேதமதிப்பீடுகளை ஆராயவதற்கும் இந்தக் குழு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்பில் இலங்கையின் முக்கிய அதிகாரிகளுடன் இவர்கள் கலந்துரையாடவுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தமது அனுபவங்களை யப்பானிய நிபுணர்கள் இலங்கை அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்ள இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# வைத்தியசாலைப் பராமரிப்புக்கு கைதிகளை உள்ளடக்கிய குழு

(கண்டி)

கண்டி மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் பராமரிபபு நடவடிக்கைகளுக்கென சிறைச்சாலை கைதிகளை உள்ளடக்கிய பராமரிப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைததியசாலை பராமரிப்புப் பிரிவில் உள்ள தொழிலாளர்கள் சேவைக்குப் போதுமானதாக இல்லாதமையினாலேயே இந்த செயற்திட்டத்தினை ஆரம்பித்துள்ளதாக மத்திய மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பிரியானநத தேவகே தெரிவித்துள்ளார். போகம்பர சிறைச்சாலையின அத்தியட்சகரின் உதவியும் இதற்கெனப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடும் கைதிகளுக்குக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் பிரியானந்த தேவகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போகம்பர சிறைச்சாலை கைதிகளின் செயற்பாடுகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் உள்ள 102 வைத்தியசாலைகளின் பராமரிப்புப் பணிகள் இந்தப் புதிய பிரிவினினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ந-9)

## சாயி அருளமுதம்



சத்யமும் தர்மமும் ஒன்றாகவே செல்லும். ஒரே நாணயத்தின் இருபக்கங்களே அவை. "ஸத்யம் நாஸ்திபரோ தர்மா" சத்தியத்திலும் மேம்பட்ட தர்மம் வேறில்லை. தர்மமானது சத்யம் என்ற அத்திபாரத்திலேயே கட்டப்படுகிறது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# நீர்வேலிச் சம்பவம் குறித்து ம.உ. ஆணைக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் இரவு நேரத்தில் இராணுவத்தினர் நடமாடுவதாக அப்பகுதி மக்கள், யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மனிதஉரிமை ஆணைக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். -

இதேவேளை நீர்வேலியில் வயோதிபப் பெண் ஒருவரை இராணுவச் சிப்பாய் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்த சம்பவம் தொடர்பாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி றுவன் சந்திரசேகர விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக இவர் உரும்பிராய் இராணுவ முகாமிற்குச்சென்று விசாரணை செய்துள்ளார். (ச-19)

## ஆயுதக்குழுக்களை வெளியேற்ற ...

போக்குவரத்துகளும் தடைப்பட்டிருந்தன. ஹரபொல கிராமத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத இராணுவ சீருடை தரித்த ஆயுக்குழுவொன்றினால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற்கு தமது பகுதியிலுள்ள தீவுச்சேனையில் பதுங்குகுழி அமைத்து முகாமிட்டுள்ள ஆயுதக் குழுவொன்றே காரணம் என்றும், இதுபற்றி இராணுவம், பொலிஸ் மற்றும் ஆளும் கட்சி அமைச்சரான மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அறிந்திருந்தும் மௌனம் சாதித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களை அவர்களின் இல்லங்களிலிருந்து ஊர்வலமாக எடுத்துசென்று ஹரபொல மற்றும் முத்துக்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நடத்திய இந்த வீதிமறியல் போராட்டத்தில் சகல இன மக்களும் கல்ந்து கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரேதப்பெட்டிகளுடன் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பிட்ட ஆயுதக்குழு ஒன்றினால் தொடரும் படுகொலைகளுக்கு எதிராக தமது கண்டன உணர்வுகளை வெளிப்படுத்தினர். இக்குழுவினர் வெளியேற்றப்பட்டால் தங்கள் பிரதேசத்தில் தொடரும் அப்பாவிகள் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ச)

## தேசியத் தலைவர் அக்கறையுடன்...

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில், கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருடான சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு சமாதான முயற்சிகள் மூலம் தீர்வுகாண வேண்டும் என்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். அதற்கான வழிவகைகளை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் நாள்தோறும் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றார்.

ஆனால், அரசு சமாதான முயற்சிகளை இழுத்தடித்து போருக்கான சூழலை உருவாக்குவதிலும் போர் முனைப்புடன் செயற்படுவதிலும் அக்கறை செலுத்தி வருகிறது. போர்நிறுத்த காலத்தில் ஏற்பட்ட அமைதிச் சூழலை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வினை வழங்கமுடியாத அரசு, தமிழ் மக்களை போரின் பாதையில் தள்ளிவிடவே முயற்சிகள் செய்து வருகிறது. இந்த உண்மை நிலையை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று சேதங்களை பார்வையிட்டமைக்காக தமிழ் மக்கள் சார்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை சார்பிலும் சோ.தங்கன் நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் அரசானது கடந்த கால போரின் மூலம் தமிழ் மக்களின் உயிர்களை பறித்ததுடன் உடைமைகளையும் அழித்தனர். ஆழிப்பேரலையானது வடக்கு கிழக்குப் பகுதியான தமிழர் தாயகத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய நிலையிலும் அரசானது தமிழ் மக்களுக்கு எதுவித உதவிகளையும் இதுவரை செய்யவில்லை.

ஆனால், கனடாவில் வசிக்கும் எமது தமிழ் உறவுகள் பல உதவிகளை புரிந்துள்ளனர். நேரடியாக பலர் தமிழர் தாயகத்திற்கு வந்து உதவிகள் புரிந்துள்ளனர். அது மட்டுமன்றி சர்வதேச உதவி நிறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஆழிப்பேரலை பாதிப்பின்போது மக்களுக்கு பல உதவிகளை புரிந்துள்ளன என்றும் அவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஜோகோ மாட்டின், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை கனடாவில் தடை செய்யும் சூழல் எழும்போது கனடா நாடாளுமன்றில் அத்தடை முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுப்பேன் என தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன், திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த செல்வின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மீனா தலைமை தாங்கினார். இவர்களுடன் கனடா நாடாளுமன்ற உறுப்பினர்களான டெரிக்லி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோகோ மாட்டின், செனட்டர் ஜோசப் டே ஆகியோருடன் கனடாவை வதிவிடமாக கொண்ட தமிழ் மற்றும் சிங்கள வர்த்தக பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். சந்திப்பின் நிறைவில் கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகம் சென்றனர். பின்னர் முல்லைத்தீவுக்கு சென்று ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளையும் பார்வையிட்டனர். (ச)

NIRU
KONDAVIL
A/L 2007
CHEMISTRY
ஆரம்பம் –17.03.2005
வியாழன் – 4.30
N.மகேஸ்வரன்
(C-1167)

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் வைத்தியநாதன் ஐயா

(ஆசிரியர், கோப்பாய் மகாவித்தியாலயம், பிரதமகுரு லிங்கப் பிள்ளையார் கோவில் இருபாலை கிழக்கு)

இருபாலை கிழக்கு லிங்கப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் வைத்தியநாதன் ஐயா நேற்றுக் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

லிங்கப் பிள்ளையார் கோவிலடி,
இருபாலை கிழக்கு,
இருபாலை

தகவல்
மனைவி

(9294)

# அரசியல் அமைப்பு விரைவில் திருத்தம் செய்யப்படவேண்டும்

## டியூ குணசேகர

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசியலமைப்பைத் திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக அரசியல் விவகார அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் அமைப்பைத் திருத்துவதன் மூலமாக நிரந்தரத் தீர்வொன்றைக் காணமுடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கண்டியில் இடம்பெற்ற கலாநிதி என்.எம்.பெரேராவின் நினைவுதின வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமஷ்டிமுறையிலான அரசியலமைப்புக் குறித்த யோசனைகள் புதிதல்ல என்றும், 1997 ஆம், 2000 ஆம் ஆண்டுகளில் சமஷ்டி முறைமைகள் குறித்த விடயங்கள் தீர்வுக்காக முன்வைக்கப்பட்டிருந்தன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-07)

## சு.ப. தமிழ்ச்செல்வன்...

ஜேர்மனிக்குச் சென்றுள்ள இவர்கள் ஜேர்மனிய வெளிநாட்டமைச்சுடனான சந்திப்பிலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டனர்.

ஜேர்மன் பயணத்திட்டத்தை நிறைவு செய்யும் அரசியல் விவகாரக்குழு இன்று காலை 7 மணிக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான தொடர் பயணத்தை மேற்கொள்கின்றன. (ச)

## இராணுவச்...

படைப்பிரிவைச் சேர்ந்த இவர் அதிகாரிகளின் தொல்லை தாங்காமல் தப்பிவந்ததாகத் தெரிவித்தார்.

இவர் நேற்று மாலை யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டார். (ப)

## புலிகளின்...

சென்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு நடத்திய பேச்சுக்களில் 80 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் நிவாரணத்தை வழங்க பிரித்தானியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இருந்தும் புலிகளின் வான்படை தொடர்பான அக்கறை பற்றிய செய்தி தொடர்பாக பிரித்தானிய தரப்பு எதுவித செய்திகளையுமே வெளியிடவில்லை.

ஏற்கனவே இலங்கை பெற்றுக்கொண்ட கடன்களுக்கு 10 வீதக் கழிவை பிரித்தானியா வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## துப்பாக்கி - அம்பாறை...

மட்டக்களப்பு கல்முனை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இனம் தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## பொதுக் கட்ட...

ரணில் குற்றஞ்சாட்டினார்.

ஆனால், விடுதலைப் புலிகள் பொதுக் கட்டமைப்பினை விரைவில் உருவாக்குவதற்காக துரிதமாகச் செயற்பட்டுவருவதோடு அதனை ஆரம்பிப்பதற்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதனைப் பயன்படுத்தி அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை விரைவாக உருவாக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசினதும், விடுதலைப் புலிகளினதும் பங்கே அதிகரித்துக் காணப்படுகிறது. அது நல்லதல்ல. முஸ்லிம்களதும் சிங்களவர்களதும் பங்கும் அவசியமே. இதனை கவனத்தில்கொண்டு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

நாம் ஆட்சியில் இருந்திருப்போமானால் இத்தனைக்கும் பொதுக் கட்டமைப்பை உருவாக்கியிருப்போம். விடுதலைப் புலிகளின் ஆர்வத்தை நாங்கள் பயன்படுத்தியிருப்போம். பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் விடுதலைப் புலிகளின் ஆர்வம் பாராட்டத்தக்கதென அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## எதிர்க்கட்சியுடன்...

எம்மைத் தூக்கிஎறிந்து எதிர்க்கட்சியுடன் சேர்ந்து கூத்தடித்து வருகின்றது. இது அவ்வளவு நல்லதல்ல என அவர் தெரிவித்தார். ஜே.வி.பியின் கொழும்பு மாவட்ட குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமக்கு தரவேண்டிய அமைச்சுப் பொறுப்புக்கள் ஏமாற்றப்பட்டு வந்தமை, சமாதான பேச்சுவார்த்தைகளிலும் சரி, இனப்பிரச்சினை விடயங்களிலும் சரி எமது கருத்தினையும் எண்ணங்களையும் ஜனாதிபதி கேட்பதில்லை. அரசாங்கத்தில் அங்கும் வகிக்கும் எமக்கு எளளளவு மதிப்பும் ஜனாதிபதி தலைமையிலான அரசு தருவதில்லை.

இவ்வாறான செயல்களினை செய்யும் அரசில் சேர்ந்திருப்பது எமது முட்டாள்தனம் என நாங்கள் சிந்திக்கவேண்டிய இக்கட்டான நிலை தற்போது தோன்றியுள்ளது என்றார்.

எதிர்க்கட்சியுடன் சேர்ந்து தமிழ்த் தேசியக் கட்சியை ஆதரித்தும் எம்மை எதிர்ப்பதும் அரசின் தற்போதைய நிலைப்பாடாக காணப்படுகின்றது. இது தொடர்பில் நாங்கள் தொடர்ந்தும் பொறுமைகாத்து வருவது அரசினதும் ஜனாதிபதியினதும் நல்லகாலம் என அவர் தெரிவித்தார். எமது பொறுமை எல்லை மீறிப்போகுமானால் மீண்டும் ஒரு இனப்பிரச்சினைக்கு வழிவகுக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்தார். (ச-4)

## திருக்கோவிலில் நேற்று ஆர்ப்பாட்டம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட காயத்திரி கிராம மக்கள் தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி நேற்று திருக்கோவில் 'பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அக்கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இவர்களால் பிரதேச செயலாளரிடம் நிவாரணம் வழங்கக்கோரும் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த மனுவை அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் கே.தவராஜா உறுதியளித்துள்ளார். (ச)

## போராளி வீரச்சாவு

ஜெயசிக்குறு எதிர்ப்புச் சமரின்போது விழுப்புண் அடைந்து, சிகிச்சை பெற்று வந்த போராளி ஒருவர் கடந்த புதன்கிழமை வீரச்சாவடைந்துள்ளார்.

சாமிப்புலம் நல்லூர் பூநகரி மன்னாரைச சேர்ந்த மேஜர் நவக்குமார் என்றழைக்கப்படும் கதிரவேலு சந்திரமோகன் என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். (ச)

## துப்பாக்கி - மட்டக்களப்பு...

சைக்களில் வந்துகொண்டிருந்த இனம் தெரியாத இருவர் மற்றொரு சைக்கிளில் முன்னால் சென்றுகொண்டிருந்தவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை மட்டக்களப்பு பனங்காடுப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

செங்கலடியைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெயநேசன் (வயது 23) என்பவரே கொல்லப்பட்டவராவார். (ச-8)








இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.